


புதுகை
# வரலாறு
நாளிதழ்






ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ ஜனவரி. 15, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 8 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 102 ❖ ரூ.10


## மும்மொழிக் கொள்கை ஒருபோதும் தமிழ்நாட்டில் உருவாக வாய்ப்பு இல்லை

# திட்டவட்டம்

## பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வரலாற்றை மாற்றவோ, திரிக்கவோ முயலக்கூடாது. இருமொழிக் கொள்கையே நீடிக்கும் : தமிழ்நாடு அரசு



**சென்னை, ஜன. 15–**

**தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே தொடரும் எனவும், அண்ணாமலை பகல் கனவு காண்பதுபோல் மும்மொழிக் கொள்கை ஒருபோதும் தமிழ்நாட்டில் உருவாக வாய்ப்பு இல்லை எனவும் தமிழ்நாடு அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது.**

பள்ளிமாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு குறித்த அறிவை ஊட்டுவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது தமிழ்நாடு அரசு. அதன்படி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவில் பயிற்சி அளிப்பதற்காக மைக்ரோசாப்ட் TEALS திட்டம் எனும் ஒரு திட்டத்தை, நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கிறது. இது குறித்து பாஜகவின் மாநில தலைவர் அண்ணாமலை கூறுகையில், இது தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட திட்டம் என்று தெரிவித்துள்ளார். மேலும் வெகு விரைவில் மும்மொழிக்கொள்கையை தமிழ்நாடு அரசு கொண்டுவரும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இதற்கு தமிழ்நாடு அரசு பதில் அளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: ”அண்ணாமலை வரலாற்றை மாற்றவோ, திரிக்கவோ முயலக் கூடாது. தமிழ்நாடு அரசு அவரது கூற்றை முற்றிலும் நிராகரிக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழ்நாட்டுக்கு என்று வரலாறும் பாரம்பரியமும் உண்டு.

கடந்த 1920 ஜூலை 16ம் தேதி கிண்டி பொறியியல் கல்லூரியில் தமிழ் மன்ற விழாவில் பங்கேற்ற தந்தை பெரியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஐபிஎம் கம்ப்யூட்டர் 1620 என்ற கணினியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்திருந்தார். அப்போது ஒவ்வொருவரின் சட்டைப் பையிலும் வருங்காலத்தில் ஒரு தகவல் தொடர்பு கருவி இருக்கும் என இன்றைய செல்போன் குறித்து அன்றே கணித்து சொன்னார்.”

”இதன் தொடர்ச்சியாக 1997 ல் அன்றைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு தமிழ்நாட்டுக்குஎனதனியே தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை ஒன்றை உருவாக்கி, தனியாக ஒரு துறையை உருவாக்கினார். அதற்கென ஒரு அமைச்சரும் நியமிக்கப்பட்டார். இதற்கான திட்டங்களை தீட்டியதோடு, டைடல்பார்க் போன்ற கட்டமைப்புகளை மாநிலத்தில் உருவாக்கி உலக நிறுவனங்களின் முதலீட்டு மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டினார்.

இதையடுத்து அரசு துறைகளை கணினிமயமாக்கியதன் மூலம் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பணிச்சுமை குறைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாகவே செயற்கை நுண்ணறிவுக்கு என தனியே ஒரு கொள்கை

2ம் பக்கம் பார்க்க

**வாழ்த்து**

வாசகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தமிழர் திருநாள் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**அறிவிப்பு**

பொங்கல் பண்டிகை முன்னிட்டு புதுகை வரலாறு அலுவலகத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை எமது அடுத்த இதழ் 18ம் தேதியில் இருந்து வெளிவரும்

நிர்வாகி










# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









# பொங்கல் திருநாளையொட்டி 3184 சீருடை பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, ஜன. 15-

2024 பொங்கல் திருநாளையொட்டி 3,184 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்கள், பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 119 பேருக்கும், சிறைத்துறையைச் சேர்ந்த 59 பேருக்கும் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமதுபணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர், காவலர் நிலை-1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3,000 பணியாளர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்" வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர் (சிறப்பு நிலைய அலுவலர்), இயந்திர கம்மியர் ஓட்டி (சிறப்பு நிலைய அலுவலர் (போக்குவரத்து), தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 119 அலுவலர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண் மற்றும் பெண்) நிலைகளில் 59 பேர்களுக்கும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்" வழங்க தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார். மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலைவேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400, 2024, பிப்ரவரி 1-ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்பநாய்படைப்பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் என ஆக மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்" வழங்க தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார். இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும். இவர்கள் அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு விழாவில் பதக்கம் மற்றும் தமிழக முதல்வரின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் பெயர் மாறும் அரசியல் கட்சி தேர்தல் தோல்வி காரணமாக அதிகரிக்கும் நெருக்கடி

தெலங்கானா : ஜன. 15, கட்சிக்கு பழைய பெயரையே சூட்டுமாறு 'பாரத ராஷ்டிர சமிதி' கட்சியின் தொண்டர்கள் மத்தியில் கோரிக்கை வலுத்து வருகிறது.

தெலங்கானா மாநிலத்தில் பிஆர்எஸ் கட்சி அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் தோல்வி அடைந்தது. மூன்றாம் முறையாக ஆட்சி அமைக்கும் அரிய வாய்ப்பினை இழந்தது. தெலங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டது முதலே தொடர்ந்து இரண்டு முறை தெலங்கானா ராஷ்டிர சமிதி வெற்றி பெற்று வந்தது. அதன் தலைவரான கே.சந்திரசேகர ராவ் முதல்வராக நீடித்தார். இந்த முறை 'தெலங்கானா ராஷ்டிர சமிதி' என்பதற்கு பதிலாக 'பாரத ராஷ்டிர சமிதி' என்ற புதிய பெயரில் கட்சி போட்டியிட்டது.

கட்சியின் இந்த பெயர் மாற்றத்துக்கு தொண்டர்கள் மத்தியில் வரவேற்பு இல்லை. கட்சியின் பெயரை மாற்றுவதற்கு எதிராக அப்போதே அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர். தெலங்கானா மக்களின் நலம் நாடும் பிராந்திய கட்சியாக, 'தெலங்கானா' என்ற வார்த்தை கட்சியின் பெயரில் இல்லாது, 'பாரத்' என்ற வார்த்தை இடம் பெற்றதற்கு தொண்டர்கள் மத்தியில் அதிருப்தி நிலவியது. கட்சியின் இரண்டாம் மட்டத்து தலைவர்கள் இதனை தலைவர் கே.சந்திரசேகர் ராவ் வசம் எடுத்துச் சென்றனர்.

கட்சியின் பெயரில் இருந்த 'தெலங்கானா' வார்த்தையை நீக்கியது மாநில மக்கள் மத்தியில் உணர்வு ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், வாக்காளர்களிடமிருந்து விலக்கத்தை ஏற்படுத்தக்




கூடும் என்றும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பின்னர் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் கட்சியின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணமானதாக அவர்கள் குறைபட்டனர். மக்களவைத் தேர்தல் நெருக்கத்திலேனும் கட்சிக்கு மீண்டும் தெலங்கானா ராஷ்டிர சமிதி என்ற பழைய பெயரையே சூட்டுமாறு, அவர்கள் கட்சித் தலைவர் கே.சந்திரசேகராவிடம் கோரி வருகின்றனர்

மாநில அரசியலுக்கு அடுத்தபடியாக, மத்தியில் ஆளும் பாஜகவுக்கு எதிராக தேசிய அளவில் செயல்படும் வகையிலும், எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதற்கு தலைமைதாங்கும்நோக்கிலும், தனது தெலங்கானா ராஷ்டிர சமிதி கட்சியை, தேசிய கட்சியாக கே.சந்திரசேகர ராவ் மாற்றினார். ஆனால் கட்சியின் பெயர் மாற்றப்பட்டது முதலே அவருக்கு சறுக்கல் தொடங்கியது.

தேசிய அளவிலான எதிர்கட்சிகள் கூட்டணியில் அவர் இடம்பெறவில்லை. இந்தியா கூட்டணியில் இருந்து அவருக்கு அழைப்பு விடுக்கப்படவும் இல்லை. பாஜக தரப்பில் டெல்லி மதுபான வழக்கில் தரப்பட்ட நெருக்கடிகள் காரணமாக கே.சந்திரசேகர ராவ் மற்றும் அவரது மகள் கவிதா ஆகியோர் தேசிய அரசியலுக்கு திரும்பவே இல்லை.

கட்சியின் பெயரில் தேசிய கட்சிக்கான அடையாளத்தை உருவாக்கிவிட்டு, தேசிய அரசியலில் ஈடுபடாத வினோதத்தை பிஆர்எஸ் கட்சி எதிர்கொண்டது. இந்த சூழ்நிலையில் மீண்டும் மாநில மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையிலான 'தெலங்கானா' என்பது கட்சியின் பெயரில் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. அதாவது பிஆர்எஸ்-க்கு பதிலாக பழைய டிஆர்எஸ் என்றே கட்சியின் பெயர் மாற்றப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தொண்டர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. தொண்டர்களின் உணர்வுக்கு மதிப்பளித்தும், தேர்தல் நோக்கிலும் விரைவில் பிஆர்எஸ் மீண்டும் டிஆர்எஸ் என பெயர் மாற உள்ளது.



## திட்டவட்டம்... முதல் பக்க தொடர்ச்சி

தமிழ்நாட்டில் 2020ல் உருவாக்கப்பட்டது."

"தேசிய கல்விக் கொள்கை என்கிற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இவையெல்லாம் நடைபெற்றுள்ளன. தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அதில் சில மாநிலங்கள் அடைய வேண்டிய இலக்குகள் என்று சொல்லப்பட்டிருக்கும் பலவற்றை தமிழ்நாடு ஏற்கனவே அடைந்து விட்டது.

2035 ஆம் ஆண்டுக்குள் தேசிய அளவில் மாணவர் சேர்க்கை விகிதத்தை 50 சதவீதம் ஆக்க வேண்டுமென மத்திய அரசு கூறியுள்ள நிலையில், தமிழ்நாடு 100 சதவீத இலக்கை எட்டிவிடும். தமிழ்நாடு அரசு செய்ததை, செய்து கொண்டிருப்பதை தேசிய கல்விக் கொள்கையில் இணைத்துவிட்டு, தேசிய கல்விக் கொள்கையின்படி தமிழ்நாடு செயல்படுகிறது என்று சொல்வது நகைப்பிற்குரியது"

"குறிப்பாக தொழில்நுட்பம் சார்ந்து தமிழ்நாட்டுக்கு யாரும் வகுப்பெடுக்க தேவை இல்லை. நாட்டின் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு எப்போதும் தொழில்நுட்பத் துறையில், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் முன்னோடி மாநிலமாகவே திகழ்ந்து வருகிறது. முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங் போன்றவற்றில் வருங்காலத்தில் மிகத் தீவிரமாக பயிற்சிகள் அளிக்கப்படும்.

செயற்கை நுண்ணறிவை கையில் எடுக்கும் மாநிலமே இன்னும் பத்தாண்டுகளில் முன்னணி மாநிலமாக இருக்கப் போகிறது. பெரியார் காட்டிய பாதையில் தமிழ்நாடு அரசு முற்போக்கு பாதையில் செல்லும் அரசாகவே செயல்படும். அண்ணாமலை பகல் கனவு காண்பது போல், மும்மொழிக் கொள்கை ஒருபோதும் தமிழ்நாட்டில் உருவாக வாய்ப்பு இல்லை. இருமொழிக் கொள்கையே தொடரும்" என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்ட மாணவருக்கு காவல்துறை அதிகாரி பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு



புதுக்கோட்டை , ஜன. 15-

*புதுக்கோட்டை மௌண்ட் சியோன் சி.பி.எஸ்.சி. பள்ளியில் நடைபெற்றவிழா ஒன்றில் மௌண்ட் சீயோன் பள்ளியின் மாணவரும், தற்போது சாஸ்த்ரா பல்கலைகழகத்தில் B.Com., B.L., (Hons) மற்றும் company Secretary படித்துவரும் புதுக்கோட்டையை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் மற்றும் நோட்டரி பப்ளிக் கே.எம்.முருகப்பனின் மகன் எம்.குமரப்பனுக்கு திருச்சி சரக Deputy Inspector General of Police பகலவன் ஜெய்ப்பூரில் இந்திய அளவில் ஒத்திகை வாதாடு மன்றத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றமைக்காகவும், குமரப்பன் எழுதியுள்ள கருத்துரைகள் இந்திய அளவில் உள்ள சட்ட புத்தகங்களில் பல சட்டப்பகுதி பிரிவுக்கூறுகளில் வெளியாகியிருப்பதை பாராட்டியும் சான்றிதழ் வழங்கினார்.*

*மேற்படி விழாவில் மௌண்ட் சியோன் நிறுவனங்களின் சேர்மன் ஜோனர்த்தன் ஜெயபாரதன், வழக்கறிஞர் சொக்கலிங்கம், வழக்கறிஞர் மற்றும் நோட்டரிபப்ளிக் கே.எம். முருகப்பன் ஆகியோர்கள் கலந்துகொண்டார்கள்.*




# சிவகிரியில் அனைத்து சமுதாய பொதுமக்கள் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழா



சிவகிரி : ஜன. 15, தென்காசி மாவட்டம், சிவகிரியில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் 120க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சிலம்பாட்டம், நலத்திட்ட உதவிகள், துப்புரவு பணியாளர்களை கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைமை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, மருத்துவர் அணி மாநில துணைச் செயலாளர் மருத்துவர் செ.சு.செண்பக விநாயகம், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ். டி.சீனிவாசன், சிவகிரி பேரூராட்சி மன்ற தலைவி கோமதி சங்கரி வடிவேலு, வழக்கறிஞர் மருதப்பன், அருணாசலம், பிச்சையா, புல்லட் கணேசன், குகன் அவைத் தலைவர் துரைராஜ், மாவட்டத் துணைத் தலைவர்வே. மனோகரன், வாசு ஒன்றிய பெருந்தலைவர் முத்தையா பாண்டியன், சிவகிரி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் லட்சுமி ராமன், நாச்சியார், ஜமீன்தார் விக்னேஷ் ராஜா, ஆயில் ராஜா பாண்டியன், கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் மருது பாண்டியன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் அ.மணிகண்டன், மருத்துவர் ஜோதி, டி.எஸ். மணி, ஆனந்த் ஆறுமுகம், கட்டபொம்மன், வாசு துணை சேர்மன் லைலா பானு, புளியங்குடி நகர செயலாளர் எ.அந்தோணிசாமி, சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மாணவர் அணி துணை அமைப்பாளர் விக்ரம் மணிகண்டன், அன்புராஜன், மாவட்ட பிரதி சுரேஷ், சேக் மைதீன் குகன் வழக்கறிஞர், தங்கராஜ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முத்துலட்சுமி, கிருஷ்ண லீலா, தகவல் தொழில் நுட்ப அணி கிப்சன், மருத்துவரணி முத்துக்குமார், ரமேஷ் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், பாலகுரு மற்றும் நகர, ஒன்றிய, பேரூர், சார்பு அணி நிர்வாகிகள் சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





▶ சென்னை எழும்பூர், இராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற "பொங்கல் விழாவில்" காவல் ஆணையாளர் கலந்து கொண்டு காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் பொங்கல் வைத்து கொண்டாடினார். பின்னர் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கிராமிய கலை நயத்துடன் கூடிய அரங்குகளை பார்வையிட்டு, அனைவருக்கும்தமது பொங்கல் வாழ்த்தினை தெரிவித்தார். பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற காவலர் ஆளிநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பரிசுகளையும் வழங்கினார்.

## தரங்கம்பாடி பேரூராட்சியில் பொங்கல் விழா

# தூய்மை காவலர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை எம் எல் ஏ நிவேதா எம்.முருகன் வழங்கினார்





தரங்கம்பாடி, ஜன-15; மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் பொங்கல் விழா பேரூராட்சி தலைவர் சுகுணசங்கரி குமரவேல் தலைமையில் கொண்டாடப்பட்டது. செயல் அலுவலர் கமலகண்ணன் விழாவிற்கு முன்னிலை வகித்தார்.

விழாவில் கோலப்போட்டி, பானை உடைத்தல் மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கவுன்சிலர்கள், அலுவலக ஊழியர்கள், தூய்மை காவலர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். போட்டிகளில் பங்கேற்று வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகளையும், அனைவருக்கும் பொங்கல் பரிசு மற்றும் தூய்மை பணிகளை சிறப்பாக செய்யும் ஊழியர்களுக்கு சான்றிதழ்களையும் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதில் சுகாதார ஆய்வாளர் இளங்கோ, பேரூராட்சி துணைத்தலைவர் பொன். ராஜேந்திரன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் விழாவில் கலந்துக்கொண்டனர்.

# சீர்காழி காவல் நிலையத்தில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் கலந்து கொண்ட சமத்துவ பொங்கல் விழா. பாரம்பரிய உடை அணிந்து, உற்சாகமாக பொங்கல் கொண்டாடிய காவலர்கள்





▶ நாடு முழுவதும் தமிழர்களின் முக்கிய திருவிழாவான பொங்கல் திருவிழா சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் விவசாயம் செழிப்பதற்கும் தமிழர்களின் திருநாளாக பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி காவல் நிலையத்தில் உள்ள காவல் முனீஸ்வரன் கோவில் வளாகத்தில் காவல் ஆய்வாளர் சிவக்குமார் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் மத வேறுபாடு இன்றி இந்து, கிறிஸ்தவர், முஸ்லிம் ஆகியோர் கலந்துகொண்டு தங்களின் முறைப்படி பிரார்த்தனை செய்து பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்தனர். தொடர்ந்து காவல் நிலையம் முன்பு சிறப்பு சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியின் போது சீர்காழி காவல் நிலையத்திற்கு உட்பட்ட காவலர்கள் அனைவரும் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி சட்டையை ஒரே விதமாக அணிந்து, பொங்கலோ பொங்கல் என முழக்கமிட்டு உற்சாகமாக கொண்டாடினர்.

# நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை முன்னாள் பிரதமரின் அறிவிப்பால் பரபரப்பு



பெங்களூர் : ஜன. 15, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் பிரதமர் தேவேகவுடா தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவரான தேவேகவுடா மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சியை உருவாக்கி அதன் சார்பில் 1994 முதல் 96 வரை கர்நாடக முதலமைச்சராக விளங்கினார். இந்நிலையில் காங்கிரசுக்கு எதிராக மாநிலக்கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்படுத்திய கூட்டணி வெற்றி பெற்றபோது 1996 ஜூன் மாதம் இவர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1997 ஏப்ரல் மாதம் வரை பிரதமராக பதவி வகித்தார். தற்போது 90 வயது ஆகும் நிலையில் தீவிர அரசியலில் இருந்து ஒய்வு பெற்று தனது மகன் குமாரசாமியிடம் கட்சியை ஒப்படைத்திருக்கிறார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்து மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சி போட்டியிட உள்ளது. இதில் மாண்டியா தொகுதியில் குமாரசாமி போட்டியிட வேண்டும் என்று அவரது கட்சிக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நாடாளுமன்ற தேர்தலில் தான் போட்டியிட போவதில்லை என்று குமாரசாமியின் தந்தையும் முன்னாள் பிரதமருமான தேவேகவுடா தெரிவித்துள்ளார்.

இது குறித்து பெங்களூருவில் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். "நான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. எனக்கு இப்போது 90 வயது. தேர்தலில் வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்வேன். எனக்கு பேசும் சக்தியும் ஞாபக சக்தியும் உண்டு. அதன் மூலம் நான் கர்நாடகாவில் பாஜக கூட்டணிக்கு ஆதரவாக பிரசாரம் செய்வேன்.

மக்களவைத் தேர்தலில் மஜத தலைவர் எச்.டி.குமாரசாமி போட்டியிடுவது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. பிரதமர் மோடி என்ன சொன்னாலும் அது கர்நாடகாவில் அப்படியே பின்பற்றப்படும். ஜனவரி 22-ம் தேதி நடைபெறும் ராமர் கோயில் திறப்பு விழாவில் எனது மனைவியுடன் கலந்து கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்தார்.

# பொங்கலுக்காக சொந்த ஊருக்கு புறப்பட்டவர்களை புலம்ப வைத்துள்ளது திமுக அரசு : டி.ஜெயகுமார்



சென்னை : ஜன. 15, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊருக்கு புறப்பட்டவர்களை திமுக அரசு புலம்ப வைத்துள்ளதாக அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயகுமார் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊருக்கு புறப்பட்டவர்களை புலம்ப வைத்துள்ளது நிர்வாக திறனற்ற திமுக அரசு. தென் மாவட்ட பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து தான் புறப்படும் என்று அறிவித்து விட்டு திடீரென்று முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே கிளாம்பாக்கத்தில் பேருந்து என மக்களை அலைய வைக்கிறது அரசு!

பொங்கல் முடிந்து தான் பொதுமக்களை ஊருக்கு அனுப்ப வேண்டும் என முதல்வரும் போக்குவரத்துத்துறை அமைச்சரும் முடிவெடுத்து வைத்ததை போல ஆமை வேகத்தில் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். முதியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பேருந்து நிலையம் வந்தடைய மக்கள் நடக்க இயலாமலும் பல மணிநேரமாக காத்திருந்தும் பேருந்துகிடைக்காத அவலமும் ஏற்பட்டுள்ளது. முதல்வருக்கும் அவரது மகனுக்கும் சினிமா படம் பார்த்து ரிவ்யூ சொல்ல தான் நேரம் இருக்கு. மக்கள் படும் பாட்டை எல்லாம் எப்படி பார்ப்பார்கள்" என்று விமர்சித்துள்ளார்.



▶ சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள அலுவலகத்தில் விஸ்ஸ்ரு குரூப் ஆஃப் கம்பெனியின் நிறுவனரும் ,சமூக சேவகர்மான டாக்டர் பி விஜயகுமார் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு ஏழை எளியவர்களுக்கும், ஊழியர்களுக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு புத்தாடைகள் வழங்கி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## இன்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு

# டாஸ்மாக் கடைகள் அடைப்பு 1500 போலீஸார் பாதுகாப்பு



மதுரை : ஜன. 15, மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் இன்று ஜல்லிக்கட்டு நடைபெற உள்ள நிலையில், அவனியாபுரத்தை சுற்றி உள்ள 10 மதுபான கடைகளை இன்று ஒருநாள் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகை என்றதும் கரும்பு, சர்க்கரை பொங்கல் ஆகியவற்றுடன் ஜல்லிக்கட்டு நினைவுக்கு வரும். அந்த அளவிற்கு சங்க காலம் தொட்டு தமிழ்நாட்டில் ஏறு தழுவுதல் எனும் ஜல்லிக்கட்டு போட்டி நடந்து வருகிறது. தற்போது இதை போட்டி என்று கூறினாலும், இது தழுவுதல் என்ற வார்த்தையை பயன்படுத்தி காளைகளுக்கும் உழவர்களுக்கும் உள்ள பிணைப்பை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.


தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றாலும் மதுரை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டுகள் உலக அளவில் புகழ்பெற்று விளங்குகின்றன. அதிலும் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு மிகவும் புகழ் பெற்றதாகும்.

தை முதல் நாளான இன்று அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுகிறது. நாளை பாலமேட்டிலும், நாளை மறுநாள் புகழ்மிக்க அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இதை ஒட்டி இன்று அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்தை சுற்றி உள்ள 10 மதுபானக் கடைகளை மூட மாவட்ட ஆட்சியர் சங்கீதா உத்தரவிட்டுள்ளார். நாளை பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டின் போது திருவள்ளுவர் தினம் என்பதால் அன்று தமிழ்நாடு முழுவதும் மதுபான கடைகளுக்கு விடுமுறை. புதன்கிழமை அன்று அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெறும் நிலையில் அலங்காநல்லூரை சுற்றியுள்ள ஏழு மதுபானக்கடைகளை மூடவும் ஆட்சியர் சங்கீதா உத்தரவிட்டுள்ளார்.

இன்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ள நிலையில் வீரர்கள் மற்றும் காளைகளுக்கு உள்ள உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் காளைகளின் உரிமையாளர்கள் புகைப்படத்துடன்கூடிய அனுமதி சீட்டுடன் வந்தால் மட்டுமே அனுமதி. காளைகளுடன் வரும் உதவியாளரும் உரிமையாளரும் மது போதையில் இருக்கக்கூடாது. காளையின் மூக்கணாங் கயிற்றை அறுப்பதற்காக உரிமையாளர்கள் கத்தி, அல்லது கூர்மையான ஆயுதங்களை கொண்டு வரக்கூடாது.

ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் வீரர்கள் புகைப்படம் உள்ள அனுமதிச்சீட்டு, உரிய மருத்துவ தகுதி சான்று எடுத்துவர வேண்டும். வீரர்கள் மது போதையில் இருக்கக்கூடாது. மீறினால் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். காளைகளின் உரிமையாளர்களும், வீரர்களும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ள விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மதுபாட்டிலில் மிதந்த பல்லி : குடிமகன்கள் அதிர்ச்சி



தர்மபுரி : ஜன. 15, பென்னாகரம் அடுத்து பாப்பாரப்பட்டி அரசு மதுபான கடையில் பீர் பாட்டிலில் பல்லி இருந்ததால் குடிமகன்கள் அதிர்ச்சி அடைந்து, கடை ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த பாப்பாரப்பட்டியில் உள்ள அரசு மதுபான கடையில் நேற்று மூன்று நண்பர்கள் 12 கிங்பிஷர் பீர் பாட்டில்களை வாங்கியுள்ளனர். இதனை எடுத்துச் சென்ற அவர்கள், பீர் பாட்டில்களை வாகனத்தில் வைக்கும் போது அதில் ஒரு பீர் பாட்டிலில் மட்டும் அளவு கம்மியாக இருந்துள்ளது. இதனைதொடர்ந்து பீர் பாட்டிலை எடுத்துக்கொண்டு அரசு மதுபான ஊழியரிடம் பீர் பாட்டிலில் மதுபானம் குறைவாக உள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

பின்னர் அந்த பீர் பாட்டிலை மேல் நோக்கி தூக்கிப் பார்த்த பொழுது உள்ளே பல்லி ஒன்று இறந்து கிடந்துள்ளதை கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்து மதுபான கடை ஊழியரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அரசு மதுபான கடை சற்று நேரம் மூடப்பட்டது. பின்னர் பாப்பாரப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து காவல்துறையினர் வந்து அந்த நபர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர்.

இருப்பினும் பல்லி இருந்த பீர் பாட்டிலை திரும்ப பெறாமலேயே அரசு மதுபான கடை ஊழியர்கள் குடிமகன்களை திருப்பி அனுப்பியுள்ளனர். இது மட்டுமல்லாமல் கடந்த வருடம் இதே போன்று காலாவதியான பீர்பாட்டில் இதே அரசு மதுபான கடையில் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்பொழுது பீர் பாட்டிலில் பல்லி இருப்பது மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. வருடத்திற்கு ஒருமுறை இதேபோன்று இந்த கடையில் நடப்பதால் குடிமகன்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

# பசுமை மின் உற்பத்தியில் பின்தங்கியது தமிழகம் ராஜஸ்தான், குஜராத்துக்கு அடுத்த இடம்



புதுடெல்லி : ஜன. 15, பசுமை மின் உற்பத்தியில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

மின் தேவையை பூர்த்தி செய்வதில், சுற்றுச்சூழலை பாதிக்காத காற்றாலை, சூரியசக்தி மின்சாரத்தை அதிகம் பயன்படுத்துமாறு, அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. அதை பின்பற்றி, அனல் மின் உற்பத்தி குறைக்கப்பட்டு, பசுமை மின்சாரத்திற்கு முன்னுரிமை தரப்படுகிறது.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை சார்பில் பசுமை மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலங்களின் தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது. 2023 டிச., 31ம் தேதி நிலவரப்படி, நாட்டில் உள்ள சூரியசக்தி, காற்றாலை, சிறிய நீர் நிலையங்களின் மின் உற்பத்தி நிறுவு திறன் பட்டியலை வெளியிட்டுள்ளது. அந்த பட்டியலில் ராஜஸ்தான் மாநிலம் 24,120 மெகாவாட் நிறுவு திறனுடன் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து குஜராத் மாநிலம் 21,977 மெகாவாட் நிறுவு திறனுடன் இரண்டாவதாக உள்ளது.

அதற்கு அடுத்த மூன்றாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. 10,429 மெகாவாட் காற்றாலை; 7,360 மெகாவாட் சூரியசக்தி; 123 மெகாவாட் சிறிய நீர் நிலையம்; 1,045 மெகாவாட் சர்க்கரை ஆலை உட்பட, ஒட்டு மொத்தமாக பசுமை மின்சார நிறுவு திறன், 18,957 மெகாவாட் உடன், தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

கர்நாடகா, நான்காவது இடத்திலும், மகாராஷ்டிரா ஐந்தாவது இடத்திலும் உள்ளன. நாடு முழுதும் காற்றாலை, 44,736 மெகாவாட்; சூரியசக்தி, 73,318 மெகாவாட்; சிறிய நீர் மின் நிலையம், 4,987 மெகா வாட் என, மொத்தம் 1.34 லட்சம் மெகாவாட் நிறுவு திறன் உள்ளது.

# சேலம் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் தி.மு.க. தொண்டர்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் – சேடப்பட்டி மணிமாறன் பேச்சு



திருமங்கலம் : ஜன. 15, திருமங்கலம், முத்தப்பன்பட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் சேலம் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் தி.மு.க. தொண்டர்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மணிமாறன் பேசினார். தெற்கு மாவட்ட அவை தலைவர் நாகராஜன் முன்னிலை வகித்தார்.

தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மணிமாறன் பேசியதாவது, தி.மு.க.வின் இரண்டாவது இளைஞர் அணி மாநாடு நடைபெற உள்ளது. கட்சியினர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும். தொண்டர்களுக்கு தேவையான வசதிகளை மாவட்டகழகம் மற்றும் இளைஞரணியினர் செய்து தருவார்கள். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் களப்பணி ஆற்ற கட்சியினர் தயாராக இருக்க வேண்டும். புதிய நிர்வாகிகள் அதிக அளவில் சேர்த்தலில் மதுரை தெற்கு மாவட்டம் முதலிடம் பிடித்தது. அது போல், தேர்தல் களப்பணியிலும் முதலிடம் பிடித்து தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டியன், மகிழன், முத்துராமன், இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, ஞானசேகரம், முன்னாள் எம்எல்ஏக்கள் முத்துராமலிங்கம், லதா அதியமான், பொதுக்குழு உறுப்பினர்கள் சிவமுருகன், ஆதி மூலம், செந்தாமரைக்கண்ணன், தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரபு, ஒன்றிய செயலாளர் பாண்டியன், ராமமூர்த்தி, முருகன், பழனி, பெரியசாமி, தனபால், உசிலை சிவா, திருமங்கலம் நகராட்சி தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான், திருமங்கலம் நகர் துணைச் செயலாளர் செல்வம், அரசு வழக்கறிஞர் தங்கேஸ்வரன், உசிலை ஜெயச்சந்திரன், ஆலங்குளம் செல்வம் உள்ளிட்டோர் பலர் பங்கேற்றனர்.

# ரூ.4 கோடி மதிப்புள்ள இடத்தை அரசு பள்ளிக்கு தானமளித்தவருக்கு கவுரவம் : அமைச்சர் அன்பில் மகேஷ்



சென்னை : ஜன. 15, அரசுப் பள்ளிக்கு ரூ.4கோடி மதிப்பிலான இடத்தை தானமாக வழங்கிய பெண்ணை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பாராட்டியுள்ளார்.

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள கொடிக்குளம் கிராமத்தை சேர்ந்தவர் ஆயி என்ற பூரணம்மாள். இவர் கனரா வங்கியில் ஊழியராக பணிபுரிந்து வருகிறார். பூரணம்மாளின் மகள் ஜனனி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருடைய நினைவாக கொடிக்குளத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியை தரம் உயர்த்துவதற்கு தானமாக பூரணம்மாள் நிலம் வழங்கினார்.

ரூ.4 கோடி மதிப்பிலான 1.5 ஏக்கர் நிலத்தை அரசு பள்ளிக்கு தானமாக வழங்கிய அவரின் செயல் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும், பூரணம்மாளை பாராட்டியுள்ளார். இதுதொடர்பாக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது, 1.5 ஏக்கர் நிலத்தை அரசு பள்ளிக்கு வழங்கிய "ஆயி என்ற பூரணம்மாளை வணங்குகிறேன் ! போற்றுகிறேன்!. மதுரை ஒத்தக்கடை கொடிக்குளம் நடுநிலைப்பள்ளியின் ஆசிரியப் பெருமக்கள் சார்பாகவும், அப்பள்ளியில் படிக்கும் வருங்கால அறிஞர்கள் சார்பாகவும், பூரணம்மாளுக்கு நன்றியை தெரிவித்து, அவரின் மகள் மறைந்த ஜனனியின் சேவை மனப்பான்மையைப் போற்றுகிறேன்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" எனும் பாரதியின் வரிகளுக்கு ஏற்ப வாழும் பூரணம்மாளின் தொண்டு மகத்தானது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, வருகிற 29-ந் தேதி மதுரையில் நடைபெறவிருக்கும் பெற்றோர் ஆசிரியர் கழக மண்டல மாநாட்டில் பூரணம்மாள் கவுரவிக்கப்பட உள்ளார் என்று பதிவிட்டுள்ளார். மேலும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பூரணம்மாளை செல்போனில் தொடர்பு கொண்டு பேசி நன்றியும் கூறினார்.

# ஊத்துக்கோட்டை பேரூர் திமுக நிர்வாகிகளுக்கு நாள்காட்டி மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பை டி.ஜே.கோவிந்தராஜன் எம்எல்ஏ வழங்கினார்



ஊத்துக்கோட்டை, ஜன15-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளது. இதில்,உள்ள திமுக நிர்வாகிகளுக்கு ஆங்கில புத்தாண்டு நாள்காட்டிகள் மற்றும் வேட்டி, சேலை, இனிப்பு, கரும்பு, ரொக்கத் தொகை உள்ளிட்டவைகள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,பேரூர் திமுக செயலாளரும், திட்டக்குழு உறுப்பினருமான அபிராமி குமரவேல் தலைமை தாங்கினார்.எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் பி.ஜெ.மூர்த்தி, பேரூராட்சி மன்ற தலைவர் அப்துல்ரஷீத்துணைத் தலைவர் குமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு திமுக நிர்வாகிகளுக்கு நாள்காட்டி மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி வாழ்த்துக்களை கூறி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், வி.பி.ரவிக்குமார், விவேகானந்தா கல்லூரி ராஜேஷ், கே.வி. லோகேஷ், கோல்டு மணிகண்டன், நித்தியபிரகாஷ் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் தாரப்படவேடு ஏரி மற்றும் கழிஞ்சூர் ஏரிகல் ரூ.28.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை அமைச்சர் துரைமுருகன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், வருவாய் கோட்டாட்சியர் (பொ) சுமதி, காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன் உட்பட பலர் இருந்தனர்.

# மாநகராட்சி ஊழியர்கள், ஆசிரியர், அங்கன்வாடி பணியாளர்களுக்கு பொங்கல் பரிசுவழங்கிய பெண் கவுன்சிலர்



சென்னை, ஜன,15

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை மாநகராட்சி48வது வார்டு பெண் கவுன்சிலர் விஜயலட்சுமி விஜயகுமார் ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது

தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்ட சென்னை மாநகராட்சி நகரமைப்பு தலைவரும் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா. இளைய அருணா கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் வைத்தார்.

இதனையடுத்து 48 வார்டுக்கு உட்பட்ட மாநகராட்சி ஊழியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குடிநீர் வாரிய ஊழியர்கள் மற்றும், பொதுமக்கள் உட்பட ஆயிரம் பேருக்கு பொங்கல் பரிசாக நான் ஸ்டிக் தவா, புடவை, பேண்ட் சட்டை, பாய், கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்பை மாநகராட்சி நகர அமைப்பு குழு தலைவர் இளைய அருணா, மாமன்றஉறுப்பினர்கள் விஜயலட்சுமி விஜயகுமார் வழங்கினார். நிகழ்ச்சியில் தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், நரேந்திரன், வட்ட செயலாளர் பாலு, வேளாங்கண்ணி, மருதுகணேஷ், ஏ.டி. மணி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மக்கள் வரிப்பணத்தை சூறையாடிய பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்



அச்சரப்பாக்கம், ஜன-15

செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்,பெரும்பாக்கம் ஊராட்சியில் 2020-21 தணிக்கை விவரம் பத்து ரூபாய் இயக்கம் மாநில துணைப் பொதுச் செயலாளரும் சமூக ஆர்வலருமான ஆர். டி.ஐ.எம்.முருகன் மக்கள் வரிப்பணத்தை பெரும்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் சூரையாடியதாக கூறியுள்ளார்.

மேலும் நூலகவரி வசூல் ஆணைக்குழு செயல்படுத்த வேண்டிய தொகையாக 1,820 ரூபாய் வீணடிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் வரியினங்கள் பிடித்தம் செய்து அரசு தலைப்பில் செலுத்தப்படவில்லை.

செலுத்தப்படாமல் 20,850 ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. குடும்ப நலநிதி பணியாளர்கள் சந்தா அரசு தலைப்பிற்கு செலுத்தப்படாமல் அரசுக்கு 24,060 ரூபாய் குறைபாடு ஏற்பட்டுள்ளது. விசைப்பம்பு பராமரிப்பு செலவினம் அரசாணைக்கும் முரணாக கூடுதல் செலவுகள் மேற்கொண்டு 3,03,594 ரூபாய் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. கைப்பம்புகள் பராமரிப்பு செலவினமாக அரசாணைக்கும் முரணாக கூடுதல் செலவுகள் செய்யப்பட்டு அரசுக்கு 48,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

சுகாதார செலவீனம் அரசு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பினை விட கூடுதல் ஒதுக்கீடு செலவினம் செய்யப்பட்டு 1,30,267 ரூபாய் வீணாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. வரி இனங்கள் முழுமையாக வசூலிக்கப்படாமல் ஊராட்சி நிதி கணக்கு எண் 1க்கு - 3,37, 972 ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டுள்ளது. திட்ட நிதி கணக்கு எண்:3. வேலைக்கான பட்டியலில் பிடித்தம் செய்த வரியினங்கள் உரிய அரசு தளத்தில் செலுத்தப்படாமல் 7971-ரூபாய் அரசுக்கு வரிஇழப்பு ஏற்பட்டுள்ளது ஊதிய கணக்கு எண்:7-குழு காப்பீட்டுத் தொகை அரசு தளத்தில் திரும்ப செலுத்தப்பட வேண்டியது 5,820 ரூபாய் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய நிதி குழுமம் கணக்கு எண்: 9, சுகாதார பொருட்கள் பாரத் மார்க்கெட்டிங் என்டர்பிரைசஸ் நிறுவனத்தில் வாங்கப்பட்டு பட்டியலில் தொகை வழங்கிய போது பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொகையினை அரசு தலைப்பில் செலுத்தப்படாமல் 1452 ரூபாய் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆக மொத்தம் பெரும்பாக்கம் ஊராட்சியில் 3,99,945- ரூபாய் அரசுக்கு வரி இழப்பும் , 4,81,861 ரூபாய் மக்கள் வரிப்பணம் கூடுதல் செலவினமாக செலவு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 8,81,861 ரூபாய் மக்கள் வரிப்பணம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே மாவட்ட ஆட்சியர் பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஊராட்சி மன்ற தலைவரை பதவி நீக்கம் செய்யவும் சமூக ஆர்வலர் கோரிக்கை வைக்கின்றனர். இவை அனைத்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அம்பலமாக்கப்பட்டது இது முதற்கட்ட அறிக்கை மீண்டும் இந்த ஊழல் பட்டியல் தொடரும் என பத்து ரூபாய் இயக்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

# கோவையில் 2 நாட்கள் இறைச்சி விற்பனைக்கு தடை



கோவை, ஜன. 15-

கோவை மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில், "நாளை திருவள்ளுவர் தினம், 25-ம் தேதி வள்ளலார் தினம் கொண்டாடப்படுகிறது.

எனவே, அன்றைய தினம் ஆடு, மாடு, கோழிகளை வதை செய்வதற்கும், இறைச்சிகளை விற்பனை செய்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி ஆகிய கடைகளை திறக்க தடை விதிக்கப்படுகிறது.

மேற்கண்ட இருநாட்களும் கோவை மாநகராட்சியால் உக்கடம், சத்தி சாலை, போத்தனூர் ஆகியபகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் அறுவை மனைகள், துடியலூரில் உள்ள மாநகராட்சி இறைச்சிக் கடைகள் ஆகியவை செயல்படாது. இந்த உத்தரவை மீறி செயல்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு & புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்ட்டர் சங்கத்தின் சார்பில் ஏழை எளியோருக்கு பொங்கல் தொகுப்பு வழங்கி கொண்டாட்டம்



சென்னை,ஜன,15

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு புதுகை வரலாறு நாளிதழ், பொன் டைம்ஸ் ரிப்போர்ட்டர் மாதம் இருமுறை இதழ், பொன் டைம்ஸ் ஆன் லைன் டிவி , ஐ எஸ் ஆர் மீடியா ஒன் நிருவனம் சார்பில் மாஸ்டர் சு.கா.அப்துல் ஷாகீத் ஹமீத் , ஊழியர்கள், நிருபர்களுக்கு ,ஏழை,எளியவர்களுக்கு 15 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு வேட்டி ,சேலை,சில்வர் பொங்கல் பானை,பச்சஅரிசி,வெல்லம் ,நெய்,முந்திரி,திராட்சை,சிறு பருப்பு,ஆகியவை அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

அதை போல தமிழ்நாடு & புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்ட்டர் சங்கத்தின் சார்பில் மிகவும் கஷ்டப்படும் நிருபர்கள்,மற்றும் பொது மக்களுக்கு பொங்கல் தொகுப்பு கைலி ,சேலை, சர்ட், சில்வர் பொங்கல் பானை ,பொங்கல் செய்ய தேவையான பச்சஅரிசி,வெல்லம்,நெய்,முந்திரி,திராட்சை,சிறுபருப்பு,ஆகியவை அடங்கிய பொங்கல் தொகுப்பு 25 நபர்களுக்கு மாஸ்டர் சு.கா.அப்துல் ஷாகீத் ஹமீத் வழங்கினார்.

மேற்கொண்ட நிகழ்ச்சிக்கு உதவிகள் வழங்கி உறுதுணையாக இருந்து உதவி செய்தவர்கள் தமிழ்நாடு புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்ட்டர் சங்கத்தின் பொருளாளர் முரளிதரன், பொதுச்செயலாளர் புதுச்சேரி சிவக்குமார், மூத்த பத்திரிகையாளர் இந்திரசேனா, கொருக்குப்பேட்டை பாரதி நகரை சேர்ந்த சமூக சேவகர்கள் ப.மணிவண்ணன், கே.முத்து கணேஷ், இன்ஜினியர் ராம்குமார்,கு. சீனிவாசன்,கோ.தனசேகர்,ஆர். எம்.டி.தனசேகர், உத்திரமேரூர் நிருபர் பிரபாகர் ஆகியோருக்கு நிருபர்கள் சங்கத்தின் சார்பில் மாநில தலைவர் சு.காதர் உசேன் நன்றி தெரிவித்தார்.

மேலும் திருப்போரூர் ரெய்ன்போ அறக்கட்டளை, முதியோர்கள் இல்லத்துக்கு தமிழ்நாடு & புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்ட்டர் சங்கத்தின் சார்பில் முதியோர்களுக்கு சேலை, கைலி யை ரெயின்போ அறக்கட்டளை நிருவனர் செல்வக்குமாரிடம், சு.காதர் உசேன் வழங்கினார். உடன். நிருபர்கள் பூபதி, ராஜேஷ், வினோத், சரத்குமார் இருந்தனர்

# ராகுல் காந்தியின் நெருங்கிய நண்பராக இருந்த மிலிந்த் தியோரா காங்கிரஸிலிருந்து விலகல்



புதுடெல்லி, ஜன. 15-

காங்கிரஸ் மூத்த தலைவரும், ராகுல் காந்தியின் நெருங்கிய நண்பராக கருதப்பட்டவருமான மிலிந்த் தியோரா அக்கட்சியில் இருந்து விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

மேலும் அவர், காங்கிரஸ் கட்சி உடனான தனது குடும்பத்தின் 55 ஆண்டு கால உறவுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி, பாரத் ஜோடோ நியாய யாத்திரையை மணிப்பூரில் இருந்து நேற்று தொடங்கிய நிலையில் மிலிந்த்-ன் இந்த ராஜினாமா அறிவிப்பு கவனம் பெற்றுள்ளது.

மாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ சேனாவில் மிலிந்த் தியோரா இணையப்போகிறார் என்ற செய்தி குறித்து செய்தியாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கேட்டபோது, அதனை வதந்தி என நிராகரித்த மிலிந்த் தியோரா நேற்று தனது ராஜினாமா அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மிலிந்த் தியோரா எப்போது ராஜினாமா செய்ய வேண்டும் என்பதன் பின்னனியில் பிரதமர் நரேந்திர மோடி இருந்ததாக காங்கிரஸ் கட்சியின் தகவல் தொடர்பு பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர், "தியோரா எந்த தருணத்தில் கட்சியில் இருந்து வெளியேற வேண்டும் என்ற முடிவை லோக் கல்யாண் மார்க்-கில் இருப்பவர் (அதாவது பிரதமர் மோடி) முடிவு செய்துள்ளார். எந்த தருணத்தில் தியோரா கட்சியில் இருந்து வெளியேறினால் அது தலைப்புச் செய்தியாகும் என்பதை நன்கு அறிந்தவர் அவர்" என்று தெரிவித்துள்ளார்.

மும்பை தெற்கு மக்களவைத் தொகுதியின் முன்னாள் உறுப்பினரான மிலிந்த் தியோரா, வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அந்த தொகுதியை உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா கேட்பது தொடர்பாக தனது அதிருப்தியை சமீபத்தில் வெளிப்படுத்தி இருந்தார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நான் எனது ஆதராவளர்களிடம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறேன். இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை" என்று தெரிவித்திருந்தார். மும்பை தெற்கு தொகுதி தொடர்பாக காங்கிரஸ் - சிவ சேனா (உத்தவ் தாக்கரே அணி) இடையே மோதல் வெடித்த நிலையில், மிலிந்த் தியோரா காங்கிரஸில் இருந்து விலகி உள்ளார். மும்பை தெற்கு தொகுதியில் போட்டியிட மிலிந்த் தியோரா விருப்பமாக இருப்பதால் அவர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ சேனாவில் இணையலாம் என்ற ஊகம் நிலவுகிறது. தெற்கு மும்பை தொகுதி தற்போது, உத்தவ் தாக்கரே சிவ சேனாவின் அரவிந்த் ஸ்வாந்த் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் நூற்றாண்டு விழா – இளைஞர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தொடங்கி வைத்தார்



அரியலூர் , ஜன. 15-

அரியலூர் மாவட்டம், மாவட்ட விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை அரியலூர் மாவட்ட பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கபாடி, கையுந்துபந்து மற்றும் கால்பந்து விளையாட்டுப்போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்யபட்டது. அதில் பதிவு செய்த அணிகளுக்கான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தொடங்கிவைத்தார்.

இப்போட்டிகள் அனைத்தும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டிகளில் கலந்துகொண்டவர்கள் வயது சான்றிதழ் மற்றும் ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை கண்டிப்பாக போட்டி நடைபெறும் இடத்தில் சரிபார்க்கப்பட்டு, மேற்குறித்த விளையாட்டுப்போட்டிகளில் 17 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் குழுக்களுக்கு மாவட்ட அளவில் நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு பரிசளிப்பு விழாவின் போது சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் அரியலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ந.லெனின், அரியலூர் வட்டாட்சியர் ஆனந்தவேல், மாணவ, மாணவிகள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன எல்.முருகன் வீட்டில் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி : ஜன. 15, தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழாவாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் பொங்கல் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடி வருகிறார்கள். அந்த வகையில் தலைநகர் டெல்லியில் மத்திய மந்திரி எல்.முருகன் வீட்டில் நேற்று பொங்கல் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பொங்கல் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினார்.

பொங்கல் விழாவையொட்டி மத்திய மந்திரி எல்.முருகன் வீடு கிராமத்தை போல் களை கட்டி இருந்தது. சுற்றிலும் கரும்பு, மஞ்சள், வாழை தோரணங்கள் கட்டப்பட்டிருந்தது. கிராமத்து குடிசை வீட்டை தத்ரூபமாக அமைத்து இருந்தனர். வீட்டின் முன்பசுமாடுகட்டப்பட்டிருந்தது. ஜல்லிக்கட்டு காளையும் கட்டப்பட்டு இருந்தது. தமிழர்களின் பாரம்பரிய அடையாளமான பிரமாண்டமாக வண்ணக்கோலம் போடப்பட்டிருந்தது.

வீட்டு வாசலில் புதிய மண்பானையில் மத்திய மந்திரி எல்.முருகனும் அவரது மனைவியும் பொங்கல் வைத்தனர். பொங்கல் பானை பொங்கியதும் பெண்கள் குலவையிட்டு பொங்கலோ பொங்கல் என்று உற்சாகமாக குரல் எழுப்பினார்கள். தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கரகாட்டம், பறையாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த கலை நிகழ்ச்சிகளில் கை தேர்ந்த கலைஞர்கள் தங்களது திறமையை காட்டி கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். இதனை பிரதமர் மோடி மிகுந்த ஆர்வத்தோடு கண்டு ரசித்தார். பொங்கல் விழாவில் பிரதமர் மோடி, தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி-சட்டை அணிந்து பங்கேற்று பேசினார். அதில், புதிய தானியங்களை பொங்கல் திருநாளில் இறைவனுக்கு படைப்பது வழக்கம், சிறுதானிய உற்பத்தியில் 3 கோடி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. வண்ணமிகு ரங்கோலி கோலத்தை போன்றது நமது நாட்டின் கலாசாரம். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்கள் இணைந்து செயல்படும்போது நாடு வளம் பெறும். 2047ல் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க உறுதி பூண்டுள்ளோம் என்று பேசினார்.

இந்த பொங்கல் விழாவில் பங்கேற்குமாறு மத்திய மந்திரி எல்.முருகன், தனது நெருங்கிய நண்பர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இதனை ஏற்று புதுச்சேரி கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், ஜார்க்கண்ட கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன், தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை, அகில இந்திய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன், தமிழக பா.ஜனதா பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, மாநில செயலாளர் வினோஜ் பி.செல்வம், புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சுந்தரேஷ், ஓய்வு பெற்ற நீதிபதி ராமசுப்பிரமணி, தினத்தந்தி குழும தலைவர் சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன், தினத்தந்தி குழும இயக்குனர் பா.சிவந்தி ஆதித்தன், பட தயாரிப்பாளர் கே.டி.குஞ்சுமோன், நடிகை மீனா மற்றும் தொழில் அதிபர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் பொங்கல் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

டெல்லியில் கடந்த ஆண்டும் மத்திய மந்திரி எல். முருகன், வீட்டில் பொங்கல் விழா நடைபெற்றது. அந்த விழாவிலும் பிரதமர் மோடி பங்கேற்றிருந்தார். 2-வது ஆண்டாக நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவிலும் பிரதமர் மோடி கலந்து கொண்டு சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அன்னை பாத்திமா கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா



திருமங்கலம் : ஜன. 15, மதுரை மாவட்டம், திருமங்கலம், ஆலம்பட்டியில் அமைந்துள்ள அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சமத்துவ பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.


கல்லூரியின் தாளாளர் எம்.எஸ்.ஷா, பொருளாளர் சகிலா ஷா, கல்லூரி முதல்வர் டாக்டர் அப்துல் காதிர் ஆகியோர் முன்னிலை வகித்து குத்துவிளக்கு தீபம் ஏற்றியும், பொங்கல் பானை வைக்கப்பட்டிருந்த அடுப்பில் தீமூட்டியும் துவக்கி வைத்தனர்.

இவ்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பேராசிரியர்களும், மாணவர்களும் உற்சாகமாக கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பாரம்பரியமான உறியடி போட்டியில் தமிழ்த்துறை மாணவர் பகவதி கண்ணன் பரிசு பெற்றார். லக்கி கார்னர் போட்டியில் மெரைன் ஹாஸ்பிடாலிடி மாணவர் முத்தையா பாண்டியன் முதல் பரிசையும், பாரன்சிக் சயின்ஸ் மாணவர் சந்தோஷ் சர்மா இரண்டாம் பரிசையும், கல்னெரி ஆர்ட்ஸ் மாணவர் டேனியல் மூன்றாம் பரிசையும் வென்றனர்.

துறைவாரியாக நடத்தப்பட்ட சுவை மிகுந்த பொங்கல் தயாரிப்பு போட்டியில் முதலாம் பரிசை ஹாஸ்பிடல் மேனேஜ்மென்ட் மற்றும் ஃபயர் அண்ட் சேப்டி துறை மாணவர்களும், இரண்டாம் பரிசை ஆங்கிலத் துறையும் மாணவர்களும், மூன்றாம் பரிசை மேனேஜ்மென்ட் மற்றும் ஏவியேசன் துறை மாணவர்களும் பெற்றனர். ரங்கோலி போட்டியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை மாணவர்கள் முதலாம் பரிசையும், தமிழ் துறை மாணவர்கள் இரண்டாம் பரிசையும், வரலாற்று துறை மாணவர்கள் மூன்றாம் பரிசையும் பெற்றனர். முன்னதாக லக்கி கார்னர் போட்டி பேராசிரியர்கள் மற்றும் பேராசிரியைகளுக்கு தனித்தனியே நடத்தப்பட்டது. பேராசிரியர்களுக்கு நடத்தப்பட்ட லக்கி கார்னர் போட்டியில் கல்லூரி முதல்வர் டாக்டர் அப்துல் காதிர் முதலாம் பரிசையும், ஹோட்டல் மேனேஜ்மென்ட் துறை பேராசிரியர் செந்தில் இரண்டாம் பரிசையும், ஆங்கிலத் துறையைச் சார்ந்த சிவக்குமார் மூன்றாம் பரிசையும் பெற்றனர். பேராசிரியைகளுக்கு நடத்தப்பட்ட லக்கி கார்னர் போட்டியில் வணிகவியல் துறை தலைவர் சமிம் பானு முதலாம் பரிசையும், ஆங்கிலத்துறை அங்காள ஈஸ்வரி இரண்டாம் பரிசையும் பெற்றனர்.

பின்பு நடந்த பரிசளிப்பு நிகழ்ச்சியில் பாரன்சிக் சயின்ஸ் பயிலும் மேகாலய மாநில மாணவி தாஹ்ருனிசா நங்சியஜ் வரவேற்புரையும், அஸ்மா பாத்திமா நன்றியுறையும் ஆற்றினர். ஏவியேசன் துறை மாணவி திவ்யநாயகி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாட்டினை பேராசிரியர்கள் விக்னேஸ்வர சீமாட்டி, அன்புச்செல்வி, மணிமேகலை, ஏ.எல். ராஜ்குமார், பால்ராஜ், திலீபன், ஆர்.கார்த்திகா, எஸ்.கார்த்திகா, முனியாண்டி தங்கபாண்டியன், கதிரேசன், கார்த்திக், சிவா, மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள் செந்தில்குமார், நாராயணபிரபு, சிஸ்டம் அட்மின் உதய கதிரவன், நாட்டு நல பணித்திட்ட மாணவ மாணவியர்கள் செய்தனர்.


அனைவருக்கும் எனது இனிய
தமிழ் புத்தாண்டு
மற்றும்
தமிழர் திருநாள்
நல்வாழ்த்துக்கள்...
100
1924 - 2023
நிவேதா எம்.முருகன் MLA.,
மாவட்ட கழக செயலாளர்,
பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க


அனைவருக்கும்
எங்கள் இனிய
பொங்கல் 15TH JANUARY
நல்வாழ்த்துகள்
VSA
மனித நேயர்
Dr.v.விஜயகுமார்
(VSA Groups - Managing Director)
M/S VSA STRATEGIC TRADERS
M/S VSA ASSOCIATES
M/S VSA STRATEGIC TRADERS PVT.LTD
"The Past Cannot Be Changed. The Future is Yet in Your Power"
044 25222077 , 99623 96999 , 9444633368


பாரம்பரியத்தின் அடையாளம்
நெல்லுமண்டித்தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ் -ன்
தங்கம் வாங்க
மேலும் மேலும்
தங்கம் சேரும்
கைராசியான நிறுவனம்
தங்கமான தெரு
நெல்லுமண்டி தெரு
அனைவருக்கும்
பொங்கல் திருநாள்
நல்வாழ்த்துகள்
நீங்கள் வாங்கும்
தங்க நகைகளுக்கு
தங்க நாணயம் இலவசம்
(அ)
எடைக்கு எடை வெள்ளி
இலவசம்
சுபமுகூர்த்த நகைகள்
வாங்குபவர்களுக்கு
பட்டுப்புடவை இலவசம்
இன்னும் எண்ணற்ற
பரிசுப் பொருள்கள்
இலவசம்
வைர நகைகளுக்கு காரட்டுக்கு
₹8500
வரை தள்ளுபடி
₹1000 குபேரலெக்ஷ்மி
நகை சீட்டில் சேரும் வாடிக்கையாளர்களுக்கு
தங்க நாணயம் இலவசம்
வெள்ளி கொலுசு
அரைஞான் கயிறு
மெட்டிக்கு
செய்கூலி
சேதாரம்
கிடையாது
வெள்ளி
பாத்திரங்களுக்கு
செய்கூலி -ல்
20%
தள்ளுபடி
பரிசுப்
பொருட்களுக்கு
20%
தள்ளுபடி
பொங்கலை முன்னிட்டு சிறப்பு சலுகையுடன் வைரம், தங்கம், வெள்ளி
மற்றும் பரிசுப் பொருள்களை மன நிறைவுடன் அள்ளிச்செல்லுங்கள்
நெல்லுமண்டித் தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி
ஜுவல்லர்ஸ்
IAF
ISO
நெல்லுமண்டித்தெரு, புதுக்கோட்டை. 04322 - 222 504, 222 505

## அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகம் துர்கா ஸ்டாலினுக்கு அழைப்பு



சென்னை, ஜன. 15- அயோத்திராமர் கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள வருமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலினுக்கு நேரில் அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சனாதனம், இந்து மதம் குறித்து திமுக எதிர்மறை கருத்துக்களை அதிகம் எடுத்து வைக்கக்கூடிய கட்சியாக உள்ளது. குறிப்பாக முதல்வர் ஸ்டாலின் மகனும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசிய பேச்சு இந்தியா முழுவதும் அவருக்கு கடுமையான எதிர்ப்புகளை சம்பாதித்துக் கொடுத்தது. உதயநிதியின் தலைக்கு விலை வைக்கும் அளவுக்கு வடநாட்டில் எதிர்ப்பு கிளம்பியது.

ஆனால் உதயநிதியின் தாயாரும் முதல்வர் ஸ்டாலின் மனைவியுமான துர்கா ஸ்டாலின் இந்து மதக் கொள்கைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். தமிழ்நாடு மட்டுமல்லாது பிற மாநிலங்களில் உள்ள கோவில்களுக்கும் தேடித்தேடிச் சென்று வழிபடுபவர். சைவம், வைணவம் என்று பிரித்துப் பார்க்காமல் அனைத்து கோயில்களுக்கும் சென்று அனைத்து கடவுள்களையும் வழிபட கூடியவர். இதை உணர்ந்து அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேக அழைப்பிதழ் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் புதிதாக கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் வருகிற 22 ம் தேதி திறக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளது. அன்றைய தினமே ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

ராமர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு பொதுமக்களுக்கு அனுமதி இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு துறை சார்ந்த பிரபலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், அயோத்திராமர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு முதல்வர் ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரின் மனைவி துர்கா ஸ்டாலினை ஆர்.எஸ்.எஸ். மற்றும் வி.ஹெச்.பி. நிர்வாகிகள் நேற்று நேரில் சந்தித்து அயோத்தி ஸ்ரீராம ஜென்ம பூமியில் ஜனவரி 22 ம் தேதி நடைபெறும் கும்பாபிஷேக அழைப்பிதழை கொடுத்து கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுத்தனர். மேலும், ராமருக்கு பூஜை செய்த அட்சதையும் அப்போது துர்கா ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது.

ராமர் கோயில் கும்பாபிஷேக விழாவை பாஜக அரசியலாக்கப் பார்க்கிறது எனவும், கட்சி சார்ந்த மத விழாவாக அதனை முன்னெடுப்பதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி வருகின்றனர். காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகள் கும்பாபிஷேகத்தை புறக்கணிக்க போவதாக அறிவித்துள்ளன. இந்த நிலையில் தமிழகத்தை ஆளும் திமுக முதல்வரின் மனைவிக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டுள்ளது அரசியல் அரங்கில் உற்று கவனிக்கப்படுகிறது.




## புதுக்கோட்டை அருகே தண்ணீர் தொட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பச்சிளம் குழந்தை தந்தையே செய்த கொடூர செயல்

**புதுக்கோட்டை, ஜன. 15-** புதுக்கோட்டை மாவட்டம் கே.புதுப்பட்டி அருகே கரையப்பட்டியில் பிறந்த 35 நாட்களே ஆன குழந்தையை கொலை செய்ததாக குழந்தையின் தந்தை மோகன் மற்றும் அவருடன் சேர்ந்து வாழும் தாய் கிருத்திகா ஆகிய இருவரை போலீசார் கைது செய்தனர்.

கரையப்பட்டியை சேர்ந்த மோகன் என்பவருக்கு ஏற்கனவே திருமணமாகி மனைவியை விவாகரத்து செய்யாத நிலையில், கடந்த ஒரு வருட காலமாக வைரிவயல் கிராமத்தை சேர்ந்த செண்பகவள்ளி என்ற கிருத்திகாவுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் அவர்களுக்கு கடந்த 37 நாட்களுக்கு முன்பு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (12ஆம் தேதி) மாலை அவர்களது வீட்டு மாடியில் உள்ள சின்டெக்ஸ் டேங்கில் கழுத்தில் காயங்களுடன் குழந்தை





சடலமாக கிடந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து கே.புதுப்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

விசாரணையில், முதல் மனைவியை முறைப்படி விவாகரத்து செய்யாமல் மற்றொரு பெண்ணுடன் குழந்தை பிறந்திருப்பது குறித்து நீதிமன்றத்தில் பிரச்னை வரலாம் என்பதால் மோகனே குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார். இதற்கு கிருத்திகாவும் உடந்தையாக இருந்ததும் போலீசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து இருவரையும் போலீசார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஒலிம்பிக் போட்டிக்கு விஜய்வீர் சித்து தகுதி



**ஜகார்த்தா : ஜன. 15,**
**பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துப்பாக்கி சுடுதல் ஆசிய தகுதி சுற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது.**

இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆடவருக்கான 25 மீட்டர் ரேப்பிடு ஃபையர் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் விஜய்வீர் சித்து 28 புள்ளிகள் குவித்து வெள்ளிப் பதக்கம் வென்றதுடன் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றார்.

கஜகஸ்தானின் நிகிதா சிர்யுகின் 32 புள்ளிகளுடன் தங்கப் பதக்கமும், கொரியாவின் ஜோங் ஹோ 23 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர். இதுவரை பாரீஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் போட்டிக்கு இந்தியாவில் இருந்து 17 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

# 2வது டி20 போட்டியிலும் நியூசிலாந்து அணி வெற்றி 21 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் தோல்வி

**ஹேமில்டன் : ஜன. 15,**
**பாகிஸ்தானுக்கு எதிரான 2வது டி20 போட்டியில் நியூசிலாந்து அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.**

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் பாகிஸ்தான் அணி 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றதை அடுத்து நேற்று 2வது போட்டி ஹேமில்டன் நகரில் உள்ள செடான் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய நியூஸிலாந்து அணியில், ஃபின் ஆலன், தேவன் கான்வே சிறப்பான துவக்கம் அளித்தனர். கான்வே 20 ரன்களிலும், கேப்டன் கேன் வில்லியம்சன் 26 ரன்களிலும், மிட்செல் சான்ட்னர் 25 ரன்களிலும் வெளியேறிய போதும், நிலைத்து நின்று விளையாடிய ஃபின் ஆலன், 5 சிக்சர்கள், 7 பவுண்டரிகளுடன் 74 ரன்கள் குவித்து அசத்தினார்.

இதையடுத்து 20 ஓவர் முடிவில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகளை இழந்து 194 ரன்களை குவித்தது. பாகிஸ்தான் அணி சார்பில் ஹாரிஸ் ராவுஃப் 3 விக்கெட்டுகளையும், அப்பாஸ் அஃப்ரிடி 2 விக்கெட்டுகளையும், அமீர் ஜமால், உசமா மிர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இதையடுத்து



195 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களம் இறங்கியுள்ளது. அதன் துவக்க ஆட்டக்காரர்கள் அயூப் ஒரு ரன்னிலும், ரிஸ்வான் 7 ரன்னிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இதைத்தொடர்ந்து பாபர் அசாம், பகர் சமான் ஆகியோர் இணை நிலைத்து நின்று ஆடி ரன்களை குவித்தது. பாபர் 66 ரன்களிலும், பகர் 50 ரன்கள் எடுத்தும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதன் பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டம் இழந்தனர், கேப்டன் ஷாஹீன் அஃப்ரிடி மட்டும் 22 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து 19.3 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து பாகிஸ்தான் அணி 173 ரன்கள் மட்டும் எடுத்தது.

இதனால் நியூசிலாந்து அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிறப்பாக பந்து வீசிய ஆடம் மில்னி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். டிம் சௌத்தி, பென் சியர்ஸ், இந்தர்பிர் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஃபின் ஆலன் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து நியூசிலாந்து அணி இந்த தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# தமிழ்நாடு வாலிபால் லீக் : சென்னை அணி சாம்பியன்



**சென்னை : ஜன. 15,**
**தமிழ்நாடு வாலிபால் சங்கம் சார்பில் முதலாவது தமிழ்நாடு வாலிபால் லீக் போட்டிகள் சென்னை மைலாப்பூரில் உள்ள சாந்தோம் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. 6 அணிகள் கலந்து கொண்ட இந்த தொடரின் இறுதி ஆட்டத்தில் சென்னை ராக்ஸ்டார்ஸ்- கடலூர் வித் அஸ் அணிகள் மோதின.**

இதில் சென்னை ராக்ஸ்டார்ஸ் 21-17, 21-16, 21-19 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று சாம்பியன்பட்டம் வென்றது. சாம்பியன் பட்டம்வென்ற அந்த அணிக்கு ரூ.5 லட்சமும், 2-வது இடம் பிடித்த கடலூர் அணிக்கு ரூ.3 லட்சமும், 3-வது இடம் பெற்ற விருதுநகர் கிங் மேக்கர்ஸ் அணிக்கு ரூ.2 லட்சமும் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற அணிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கோப்பையை வழங்கினார். விழாவில் அமைச்சர் சி.வி.கணேசன், தயாநிதி மாறன் எம்.பி., தமிழ்நாடு கைப்பந்துசங்க ஆயுட்கால தலைவர் ஆர். அர்ஜூன் துரை, தலைமை புரவலர் எஸ்.என். ஜெயமுருகன், பொருளாளர் எம்.பி.செல்வகணேஷ், போட்டி அமைப்பு குழு நிர்வாகிகள் ஆர். கே.துரைசிங், ஏ.பழனியப்பன், எஸ்.தட்சிணாமூர்த்தி, பி.கலைசெல்வன், சி.ஸ்ரீகேசவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# "ஒருநாள், டி20 போட்டிகளுக்கு அஸ்வின் தகுதியானவர் இல்லை" – யுவராஜ் சிங் கருத்து

**கொல்கத்தா : ஜன. 15,**
**"டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் இடம்பெற வேண்டும். ஆனால், டி20, ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியில் இடம்பெறுவதற்கு அஸ்வின் தகுதியானவர் என்று நான் நினைக்கவில்லை" என முன்னாள் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அண்மையில் அளித்த பேட்டியில், "அஸ்வின் ஒரு மிகச்சிறந்த பவுலர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், அவரை டி20, ஒருநாள்போட்டிகளில் இந்திய அணியில் இடம்பெறுவதற்கு தகுதியானவராக நான் நினைக்கவில்லை. பந்துவீச்சில் அவரால் சிறப்பாக செயல்பட முடியும். அதேசமயம் பேட்ஸ்மேனாகவும், ஃபீல்டராகவும் அவரால் அணிக்கு என்ன பங்களிப்பை செய்துவிட முடியும்?. டெஸ்ட் கிரிக்கெட்டில் நிச்சயமாக அவர் இடம்பெறவேண்டும். ஆனால், வொயிட் பால் கிரிக்கெட்டை பொறுத்தவரை இந்திய அணியில் இடம்பெறுவதற்கு அவர் தகுதியானவர் என நான் நினைக்கவில்லை" என தெரிவித்துள்ளார். 2011ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியில்



யுவராஜ் மற்றும் அஸ்வின் ஆகியோர் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் இந்திய கிரிக்கெட் அணியில்கடந்த2010-ம்ஆண்டு அறிமுகமானார். 2011 ஒருநாள் உலகக்கோப்பை வென்ற இந்திய அணியிலும், 2013-ம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி வென்ற இந்திய அணியிலும் இடம்பெற்றிருந்தார். அதனால் இந்திய அணியில் முன்னணி வீரராக வலம் வந்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பவுலர் என்ற பெருமை அஸ்வினுக்கு உண்டு. ஆனால், ஒருநாள், டி20 அடங்கிய வெள்ளைப்பந்து கிரிக்கெட் போட்டியில் அவருக்கான வாய்ப்புகள் இந்திய அணியில் மறுக்கப்பட்டே வந்துள்ளது. 2021, 2022 டி20 உலகக்கோப்பையில் விளையாடும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. மேலும் சமீபத்தில் நடந்து முடிந்த 2023 ஒருநாள் உலகக்கோப்பை தொடரில் ஒரே போட்டியில் மட்டும் அஸ்வின் விளையாடினார்.

வரலாறு சினிமா

# முகேஷ் அம்பானி முதல் ஷாருக்கான் வரை ஆமீர்கான் மகள் திருமண ஹைலைட்ஸ்



**மும்பை : ஜன. 15,**
**பாலிவுட் நடிகர் ஆமீர்கானின் மகள் ஐரா கான் திருமண வரவேற்பு நிகழ்வில் தொழிலதிபர் முகேஷ் அம்பானி முதல் ஷாருக்கான் வரை ஏராளமான பிரபலங்கள் கலந்துகொண்டனர்.**

பாலிவுட்டின் மெகா ஸ்டார் ஆமிர் கானுக்கு இரண்டு மனைவிகள். மூத்த மனைவி ரீனா தத்தா. இந்த தம்பதிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். மகன் ஜுனைத் கான் மற்றும் மகள் ஐரா கான். ரீனா தத்தாவை விவாகரத்து செய்தபின் இரண்டாவதாக கிரண் ராவை திருமணம் செய்த ஆமிர் கான் அவரையும் பிரிந்து தற்போது தனியாக வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில், ஆமிர் கானின்மகள் ஐராகான் தனது காதலன் நுபுர் ஷிகாரேவை திருமணம் செய்துள்ளார். உதய்பூரில் ஜனவரி 6 முதல் ஜனவரி 10 வரை ஐந்து நாட்கள் இவர்களின் திருமணம் பிரமாண்டமாக நடந்தது. முன்னதாக, ஜனவரி 3-ம் தேதியே தம்பதிகள் இருவரும் தங்கள் திருமணத்தை மும்பையில் பதிவு செய்தனர்.

இதனையடுத்து திருமண வரவேற்பு நிகழ்ச்சி மும்பையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் முகேஷ் அம்பானி, நீடா அம்பானி, சல்மான் கான், ஷாருக்கான், கவுரி கான், கங்கனா ரனாவத், ரன்பீர் கபூர், கத்ரீனா கைஃப், ரேகா, ஹேமமாலினி, சச்சின் டெண்டுல்கர், அனில் கபூர், நாக சைதன்யா, ராஜ்குமார் ஹிரானி, ஸ்மிருதி இரானி, ஏ.ஆர்.ரஹ்மான், ஜெயா பச்சன், ராஜ் தாக்ரே உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் 9 மாநில உணவு வகைகள் விருந்தினர்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

# கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு : ஷான் மார்ஷின் முடிவால் ரசிகர்கள் அதிர்ச்சி

**ஆஸ்திரேலியா : ஜன. 15,**
**ஆஸ்திரேலியா அணியின் கிரிக்கெட் வீரர் ஷான் மார்ஷ், அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளது, ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி சார்பில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வந்தவர் ஷான் மார்ஷ். 17 வருடம் 236 நாட்கள் என்ற வயதில் ஆஸ்திரேலியா அணிக்காக களமிறங்கிய ஷான் மார்ஷ், இதுவரை 38 டெஸ்ட் போட்டிகள், 73 ஒரு நாள் போட்டிகள், 15 டி20 போட்டிகளில் ஆஸ்திரேலியாவிற்காக விளையாடியுள்ளார். டெஸ்டில் 2,265 ரன்கள், ஒருநாள் போட்டிகளில் 2,073 ரன்கள், டி20 போட்டிகளில் 255 ரன்கள் என மொத்தம் சர்வதேச கிரிக்கெட்டில் 5,293 ரன்களை அவர் குவித்துள்ளார்.

2017-18ம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் போது அடுத்தடுத்து இரண்டு



சதங்களை அடித்து அவர் வெற்றிக்கு வழி வகுத்தார். இதே போல இந்தியாவில் நடைபெற்று வரும் ஐபிஎல் தொடரின் முதல் சீசனில் 616 ரன்கள் குவித்து ஆரஞ்சு கேப் வென்றிருந்தார். பின்னர் பஞ்சாப் சூப்பர் கிங்ஸ் அணியில் சிறுது காலம் விளையாடினார்.

தற்போது 40 வயதாகும் ஷான் மார்ஷ், ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக் பாஷ் லீக் கிரிக்கெட் போட்டிகளில் மெல்போன் ரெனகேட்ஸ் அணி சார்பில் விளையாடி வருகிறார். இந்நிலையில் விரைவில் நடைபெறவுள்ள சிட்னி தண்டர் அணிக்கு எதிரான போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அவரது இந்த முடிவு கிரிக்கெட் ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ரியோ ராஜின் 'ஜோ' திரைப்படம் ஓடிடியில் வெளியீடு



**சென்னை : ஜன. 15,**
**ரியோ ராஜ் நடித்துள்ள 'ஜோ' திரைப்படம் இன்று ஓடிடியில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஹரிஹரன் ராம் இயக்கத்தில் ரியோ ராஜ் நடித்துள்ள படம் 'ஜோ'. இப்படத்தை அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். மாளவிகா மனோஜ், பவ்யா த்ரிகா, சார்லி, அன்புதாசன், ஏகன் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு சித்துகுமார் இசையமைத்துள்ளார். காதல் கதையை மையமாக கொண்டு உருவான இப்படம் கடந்த நவம்பர் 24-ம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

தொடக்கத்தில் சுணக்கத்தை சந்தித்தாலும், போக போக படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இப்படம் இயக்குநரின் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு உருவானது. இந்நிலையில் இப்படம் இன்று ஹாட்ஸ்டார் ஓடிடியில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மிஷன் சாப்டர் 1 : திரை விமர்சனம்



**சென்னை : ஜன. 15,**
**மகள் சனாவின் (இயல்) சிகிச்சைக்காக லண்டன் செல்கிறார், குணசீலன் (அருண் விஜய்). மருத்துவமனையில் ஆபரேஷனுக்கு நாள் குறிக்கிறார்கள்.**

அங்கிருக்கும் கேரள செவிலி (நிமிஷா சஜயன்) அவர்களுக்கு உதவுகிறார். திடீரென ஒரு கொள்ளைக் கும்பலிடம் மாட்டிக்கொள்ளும் குணசீலன், அவர்களைத் தாக்குவதால், சிறைக்குச் செல்ல வேண்டி வருகிறது. இதற்கிடையே சிறையை ஹேக் செய்யும் தீவிரவாத கும்பல் ஒன்று, அங்கிருக்கும் தங்கள் ஆட்களைத் தப்பிக்க வைக்கும் முயற்சியில் இறங்குகிறது. இதை அறியும் குணசீலன், அந்த தீவிரவாதிகளின் திட்டத்தை முறியடிக்க களம் இறங்குகிறார். அதை அவரால் செய்ய முடிந்ததா? குணசீலன் யார்? அவர் குழந்தையின் அறுவை சிகிச்சை நடந்ததா? என்பது மீதி படம்.

கொஞ்சம் சென்டிமென்ட், நிறைய ஆக்‌ஷன் என யோசித்திருக்கிறார், இயக்குநர் விஜய். ஒரு பக்கம் மகளின் சிகிச்சை, மற்றொரு பக்கம் சிறை சிக்கல் என இரண்டும் மெயின் கதையாக இருந்தாலும் மருத்துவமனையில் மகளுக்கு உதவும் செவிலிக்கு இருக்கும் எதிரி, சிறை அதிகாரிகளுக்குள் இருக்கும் தீவிரவாத ஒற்றன் என சின்னச் சின்னத் துணை சதிகள் கதைக்கு உதவுகின்றன. அவர்களுக்கான கதாபாத்திரங்களும் சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன.

ஹவாலா மூலம் பணம் எப்படி கைமாற்றப்படுகிறது என்கிற தகவலையும் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை ஹீரோ பெற்று விடுவாரா? குழந்தைக்கு சிகிச்சை நடந்துவிடுமா? என்கிற பதைபதைப்பை அழகாகக் கடத்தும் கதையில் சிறைக்குள் வேறொரு விஷயம் வந்ததும் பரபரப்பாகிறது படம். இந்த முதல் பாதியை அடுத்து வரும் வழக்கமான 'டெம்பிளேட்' காட்சிகளும் யூகிக்க முடிகிற திரைக்கதையும் படத்தோடு ஒன்ற விடாமல் தடுக்கின்றன.

அப்பா - மகள் சென்டிமென்ட் காட்சிகள் சில இடங்களில் நெகிழ வைத்தாலும் இந்த ஆக்‌ஷன் கதைக்குள் அது தொடராமல் தொலைந்து விடுகிறது. குணசீலனுக்கான பிளாஷ்பேக் காட்சிகளும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

அருண் விஜய், மகள் இயலிடம் காட்டும் பாசம் மற்றும் பிளாஷ்பேக் காட்சிகளில் சிறந்த நடிப்பை வழங்கிஇருக்கிறார். ஆக்‌ஷன் காட்சிகளில் அவர் வேகம் பரபரக்க வைக்கிறது. அவர் வில்லன்களைத் தாக்குவது நம்பும்படியாக இருக்கிறது. குறிப்பாகச் சிறைச்சாலைக்குள் நடக்கும் அந்தச் சண்டைக் காட்சி சிறப்பு.

தமிழ்ப் பேசும் லண்டன் போலீஸ் அதிகாரியாக எமி ஜாக்சன் சில காட்சிகளில் கைதட்டல் பெறுகிறார். எப்போதும் கேமரா பார்த்துப் பேசிக்கொண்டிருக்கும் தீவிரவாதி பரத் போபண்ணா, சர்தாராக வரும் அபி ஹாசன், வார்டு பாய் விராஜ் உட்பட துணை பாத்திரங்களும் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

சந்தீப் கே விஜய்யின் ஒளிப்பதிவு ஆக்‌ஷன் காட்சிகளில் கடுமையாக உழைத்திருக்கிறது. ஜி.வி. பிரகாஷின் பின்னணி இசை படத்துக்கு ஆழமாக உதவியிருக்கிறது. லாஜிக் இல்லாத ஆக்‌ஷனை பார்க்க விரும்புபவர்களுக்கு இந்த 'மிஷன்' பிடிக்கலாம்.

# புதுச்சேரி படப்பிடிப்பில் ரஜினிகாந்த் அட்டகாசமான புகைப்படங்கள்



**புதுச்சேரி : ஜன. 15,**
**புதுச்சேரியில் படப்பிடிப்பில் கலந்துகொண்ட ரஜினிகாந்தின் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி கலக்கி வருகிறது.**

புதுச்சேரி வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோயிலில் கடந்த இரண்டு நாட்களாக 'வேட்டையன்' படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. அவர் அந்த கோயிலில் வழிபடுவது போலவும், குளத்திற்கு செல்வது போன்ற காட்சிகளும் படம்பிடிக்கப்பட்டன.

இந்த நிலையில் ரஜினி கோயிலுக்கு வந்துள்ள தகவல் அறிந்ததும் ரசிகர்கள் அங்கே பெருமளவில் கூடினார்கள். கோயிலிலிருந்து வெளியே வந்த ரஜினி, திறந்த காரில் ரசிகர்களை பார்த்து கையசைத்தபடி சென்றார். இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

டி.ஜெ.ஞானவேல் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து வரும் திரைப்படம் 'வேட்டையன்'. இந்தப்படத்தில் நடிகர் ரஜினிகாந்துடன், அமிதாப்பச்சன் 33 ஆண்டுகளுக்கு பிறகு இணைந்து நடிக்கிறார். அத்துடன் நடிகர் பகத் பாசில், ராணா டகுபதி, ரித்திகா சிங், துஷாரா விஜயன் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். இது பான் இந்தியா படமாக இருக்கும் என சொல்லப்படுகிறது.

தூத்துக்குடி, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவருகிறது.

இந்நிலையில், தற்போது புதுச்சேரியில் வேட்டையன் படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இங்கே ரஜினி படப்பிடிப்பில் கலந்துகொள்ளும் வீடியோக்கள் இப்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# வருண் தவணுடன் கீர்த்தி சுரேஷ் அட்லீ தயாரிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு

**மும்பை : ஜன. 15,**
**பாலிவுட் நடிகர் வருண் தவணுடன் கீர்த்தி சுரேஷ் நடிக்கும் புதிய படத்தை தயாரிக்கிறார் அட்லீ. இப்படத்துக்கான அறிவிப்பு வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.**

'ஜவான்' படம் மூலம் பாலிவுட்டில் தனக்கென தனிக்கொடி நாட்டிய அட்லீ தனது மனைவி ப்ரியாவுடன் இணைந்து பாலிவுட்டில் புதிய படம் ஒன்றை தயாரிக்கின்றார். இப்படம் அவரது இயக்கத்தில் வெளியான 'தெறி' படத்தின்



ரீமேக் என கூறப்படுகிறது. ஆனால் படக்குழு இன்னும் டைட்டிலையோ, ரீமேக் குறித்தோ அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்நிலையில் இப்படத்தின் பூஜை மும்பையில் நடைபெற்றது. இந்த வீடியோவை அட்லீ தனது சமூக வலைதள பக்கங்களில் பகிர்ந்துள்ளார்.

காளீஸ் இயக்கும் இப்படத்தில் வருண் தவண், கீர்த்தி சுரேஷ், வாமிகா கபி ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் மூலம் பாலிவுட்டில் கீர்த்தி சுரேஷ் நாயகியாக அறிமுகமாவது குறிப்பிடத்தக்கது. மேலும் படம் குறித்த மற்ற தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. டைட்டில் விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரலாறு உலகம்

# தொடர்ந்து தீவிர தாக்குதல்

## இஸ்ரேல்–ஹமாஸ் போர் 100–வது நாளை தாண்டியது



**காசா : ஜன. 15,**

**இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந் தேதி தாக்குதல் நடத்தினர். இதை யடுத்து போர் பிரகடனத்தை அறிவித்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் நிர்வகித்து வரும் காசா முனை பகுதி மீது தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.**

ஏவுகணை, குண்டுகள் தொடர்ந்து வீசப்படு கின்றன. மேலும் தரை வழிதாக்குதல் நடந்துவருகிறது. இந்தபோரில், காசாவில் பலியானவர்கள் எண்ணிக்கை 24 ஆயிரத்தை நெருங்கி உள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள், பெண்கள் ஆவார்கள். போரை உடனே நிறுத்த வேண்டும் என்று இஸ்ரேலுக்கு ஐ.நா. சபை மற்றும் பல்வேறு நாடுகள் வேண்டுகோள் விடுத்தன. ஆனால் அதை ஏற்க மறுத்துள்ள இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கும் வரை போர் தொடரும் என்று தெரிவித்தது.

இந்நிலையில் காசா மீது இஸ்ரேல்தொடங்கியபோர் 100-வதுநாளைதாண்டிஉள்ளது. இந்த போர் தாக்குதலில் வடக்கு காசா முழுவதும் நிர்மூலமாகிவிட்டது. அந்த பகுதி, இஸ்ரேல்கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது மத்திய, தெற்கு காசாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது.

இதனால் காசாவில் மக்கள் தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் கிடைக்காமல் அவதியடைந்து உள்ளனர். காசாவுக்குள் நிவாரண பொருட்கள் செல்ல அனுமதிக்காவிட்டால் அங்கு கடுமையான பஞ்சம் ஏற்படும் என்று ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறும்போது, "எகிப்துக்கும் காசாவுக்கும் இடையிலான எல்லையை மூடும் வரை ஹமாசுக்கு எதிரான போர் முடிந்து விட்டதாக இஸ்ரேல் கருதாது. தெற்கு காசாவில் உள்ள எல்லை வழியாக ராணுவ உபகரணங்களும் பிற கொடிய ஆயுதங்களும் தொடர்ந்து நுழைகிறது. எனவே அதை நிச்சயமாக நாங்கள் மூட வேண்டும்" என்றார்.

எகிப்துடனான எல்லை பகுதியான ரபா நகரத்தில் உள்ள ஒரு சிறிய பகுதி, இஸ்ரேலால் கட்டுப் படுத்தப்படாத பகுதியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் – பாகிஸ்தான் இடையே முற்றும் மோதலால் மூடப்பட்ட எல்லை : இந்தியாவுக்கான இறக்குமதி பாதிப்பா



**பாகிஸ்தான் : ஜன. 15,**

**ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே முற்றும் மோதல் காரணமாக இருநாட்டு எல்லையின் முக்கிய வாயில் மூடப்பட்டுள்ளது. இது இருநாட்டினர் இடையிலான இறுக்கம் என்பதற்கு அப்பால், ஆப்கனிலிருந்து இந்தியாவுக்கான இறக்குமதி பாதிக்குமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.**

பாகிஸ்தானில் தங்கியிருக்கும் சுமார் 17 லட்சம் ஆப்கன் அகதிகளை, ஆப்கானிஸ்தானுக்கு கட்டாயமாக அனுப்பும் பணிகளை பாகிஸ்தான் அரசு அண்மையில் தொடங்கியது. முன்னதாகபல தசாப்தங்களாக தொடர்ந்த உள்நாட்டுப்போர் காரணமாக லட்சக்கணக்கானோர் ஆப்கனில் இருந்து வெளியேறி அண்டை தேசமான பாகிஸ்தானில் அடைக்கலம் பெற்றிருந்தனர்.

ஆப்கனில் தாலிபன்களின் கை ஓங்கத் தொடங்கியபோது, பாகிஸ்தானிலும் அதன் தாக்கத்தினாலான பயங்கரவாத குழுக்கள் அதிகரித்தன. அந்த குழுக்களால் பாகிஸ்தான் எல்லையிலும், உள்ளாகவும் பயங்கரவாத செயல்கள் அதிகரித்தன. இந்த பயங்கரவாத குழுக்களில், ஆப்கனில் இருந்து அகதிகளாக வந்தவர்களே அதிகம் இடம்பெற்றிருப்பதாக பாகிஸ்தான் கண்டறிந்தது.

எனவே, 'பாகிஸ்தான் தாலிபன்' பயங்கரவாத குழுக்களை அடக்க, ஆப்கன் அகதிகளை ஆப்கானிஸ்தானுக்கே அனுப்ப முடிவு செய்தது. இதனையடுத்து உரிய ஆவணங்கள் இல்லாத ஆப்கன் அகதிகள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றப்படுவது மட்டுமன்றி, ஆப்கனில் இருந்து உள்ளே நுழைவோரையும் தீவிர தணிக்கை மேற்கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. இதன்படி, ஆப்கனிலிருந்துவருகைதரும் வாகனங்களில் பயணிப்போர் உரிய பாஸ்போர்ட் மற்றும் விசா இருப்பின் மட்டுமே அனுமதிக்க முடியும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

முன்னதாக இருநாட்டு வர்த்தக உறவில் இந்த கெடுபிடிகள் கிடையாது என்பதால், வணிகப் போக்குவரத்தும், காய்கனிகள் பரிமாற்றமும் எளிதில் நடைபெற்று வந்தது. புதிய உத்தரவு காரணமாக ஆப்கனிலிருந்து பாக் எல்லையில் நுழைவதற்கான கனரக வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்துள்ளன. பாகிஸ்தானின் அதிரடியை கவனித்த ஆப்கன் அரசு, அதே வழியைபின்பற்றி பாகிஸ்தான் வாகனங்களுக்கும் தங்களது எல்லையில் தீவிர தணிக்கையை தொடங்கியுள்ளது.

இதற்கிடையே ஆப்கனிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் வேளாண்விளை பொருட்கள் பாகிஸ்தான் வழியாகவே தரை மார்க்கமாக இந்திய எல்லைக்குள் நுழைகின்றன. பாகிஸ்தானின் புதிய கெடுபிடியால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படுமா என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால், ஆப்கனிலிருந்து இந்தியாவுக்கான வர்த்தக வழித்தடங்கள் முறையான அனுமதி பெற்றே செயல்படுவதால், அவை பாதிக்கப்பட வாய்ப்பில்லை எனத் தெரிய வருகிறது.

# சர்வதேச அளவில் இந்திய கரன்சிக்கு நன்மதிப்பு இந்தியாவின் ரூபாய் 35 நாடுகளில் செல்லுபடியாகும்

**புதுடெல்லி : ஜன. 15,**

**இந்தியாவின் செலவாணியான ரூபாயை, தங்கள் தேசங்களில் பயன்படுத்திக்கொள்ள இதுவரை 35 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.**

இந்திய கரன்சியை தங்கள் நாடுகளில் பயன்படுத்திக்கொள்ள இதுவரை 35 உலக நாடுகள் முன்வந்திருப்பதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், "பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சிக்காலத்தில் ரூபாயின் மதிப்பு திடமாக உள்ளது. உலகளவில் வலிமையான அமெரிக்காவின் டாலருக்கு நிகராக, இந்தியாவின் ரூபாயும் சர்வதேச நாடுகளின் மதிப்பில் வரவேற்பு பெற்று வருகிறது" என்று பெருமை தெரிவித்தார்.

மேலும் அவர் பேசும்போது, "நமது ரூபாயை தங்கள் நாட்டில் பயன்படுத்த இதுவரை 35 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இதன் மூலம் அந்த நாடுகளுக்கு பயணிக்கும் போது, அந்த நாட்டுசெலவாணிக்குபதிலாக இந்திய ரூபாயைபயன்படுத்தி சுற்றுலா பயணிகள் பயனடைய முடியும். இந்திய ரூபாயின் திடமான இருப்பு, இந்திய பொருளாரத்தின் வளர்ச்சியிலும் பிரதிபலித்து வருகிறது" என்றார்.

ஜெர்மனி, கயானா, இஸ்ரேல், கென்யா, பிஜி, மலேசியா, மொரிஷியஸ், மியான்மர், நியூசிலாந்து, ஓமன், ரஷ்யா, சீஷெல்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தான்சானியா, உகாண்டா மற்றும் இங்கிலாந்து உட்பட 35 நாடுகள் இந்திய கரன்சியை இதுவரை அங்கீகரித்துள்ளன.

முன்னதாக 'இந்திய ரூபாயின் 100 ஆண்டு கால பயணம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசிய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அண்ணல் அம்பேத்கரின் பங்கு குறித்தும் நினைவு



கூர்ந்தார். "அம்பேத்கர் அவர்களை சட்ட மேதையாக மட்டுமே நாம் அறிவோம். உண்மையில் அவர் பொருளாதாரம் உட்பட பல்வேறு துறையிலும் அனுபவம் மிக்கவராக விளங்கினார்.

ஆங்கிலேயர்கள் இந்திய ரூபாயின் மதிப்பை குறைக்க முற்பட்டபோது, அதனை எதிர்கொள்வதில் அம்பேத்கரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. லண்டன் பொருளாதார கல்வி நிலையத்தில் அம்பேத்கர் தாக்கல் செய்த இந்திய ரூபாய் தொடர்பான ஆய்வறிக்கையின் அடிப்படையிலேயே, இந்திய ரிசர்வ் வங்கி 1935-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது" என்று அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பேசினார்.

# தைவான் அதிபர் தேர்தலில்

## அமெரிக்க ஆதரவு கட்சி வெற்றி

**தைபே : ஜன. 15,**

**தைவானில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் அமெரிக்க ஆதரவு கட்சியான ஜனநாயக முன்னேற்ற கட்சியின் வேட்பாளர் லாய் சிங் டி வெற்றி பெற்றார்.**



சீனாவில் கடந்த 1911-ம் ஆண்டில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1927-ம் ஆண்டில் சீன தேசிய கட்சிக்கு எதிராக, சீன கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடி உயர்த்தியது. இதன் காரணமாக 1949-ம் ஆண்டு வரை சீனாவில் உள் நாட்டுப் போர் நீடித்தது. இந்த போரில் தோல்வியை தழுவிய சீன தேசிய கட்சியினர், தென் சீன கடலில் 168 தீவுகள் அடங்கிய தைவானில் குடியேறி ஆட்சி நடத்தினர். அந்த பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

சர்வதேச அரங்கில் தற்போது 14 நாடுகள் மட்டுமே தைவானை தனி நாடாக அங்கீகரித்துள்ளன. சீனாவின் நிர்ப்பந்தம் காரணமாக அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கூட தைவானை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. எனினும் ராணுவ ரீதியாக தைவானுக்கு அமெரிக்கா பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த சூழலில் தைவான் அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் லாய் சிங் டி, பிரதான எதிர்க் கட்சியான குவோமின்டாங் சார்பில் ஹவ் யூ, தைவான் மக்கள் கட்சி சார்பில் கோ வென் ஜி ஆகியோர் போட்டியிட்டனர்.

அந்த நாட்டின் 2.5 கோடி மக்கள் தொகையில் 1.9 கோடி பேர் வாக்குரிமை பெற்றுள்ளனர். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக 70 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்குப் பதிவு நிறைவடைந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி அமெரிக்க ஆதரவு கட்சியாகும். குவோமின்டாங் கட்சி சீன ஆதரவு கட்சியாகும்.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சியின் வேட்பாளர் லாய் சிங் டி முன்னிலையில் இருந்தார். இறுதி சுற்று வாக்கு எண்ணிக்கையில் அவர் 53.74 லட்சத்துக்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

குவோமின்டாங் கட்சி வேட்பாளர் ஹவ் யூ-க்கு 44.59 லட்சம் வாக்குகள் கிடைத்தன. சீன பாதுகாப்புத் துறை வெளியிட்ட அறிக்கையில், "தைவான் விவகாரத்தில் சீன மக்கள் விடுதலைப் படை எதற்கும் தயார் நிலையில் இருக்கிறது.

தைவானை சுதந்திர நாடாக அறிவிக்க முயன்றால், அந்த முயற்சியை நசுக்குவோம்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. இதற்குப் பதிலடியாக பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தில் அதிக அளவிலான ஆயுதங்கள், எரி பொருள் குவிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க போர்க்கப்பல்கள், விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# இந்தியாவை ஆண்டவர்களின் தலைநகரை

## ஆள துடிக்கும் இந்தியர்கள்

**பிரிட்டன் : ஜன. 15,**

**இங்கிலாந்தின் தலைநகர் லண்டன் உலகிலேயே அழகான நகரம் என பெயர் பெற்றது.**



மே 2 அன்று லண்டன் நகர மேயருக்கான தேர்தல் நடைபெற உள்ளது. 4 வருட பதவிக்காலம் உள்ள லண்டன் மேயர் பதவிக்கு தற்போது மேயராக உள்ள சாதிக் கான் மீண்டும் 3-வது முறையாக போட்டியில் இறங்கி உள்ளார். இந்நிலையில், சாதிக் கானை எதிர்த்து தருண் குலாடி (63) மற்றும் ஷ்யாம் பாடியா (62) எனும் இரு தொழிலதிபர்கள் சுயேட்சையாக களம் இறங்கியுள்ளனர். இந்த இருவருமே இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"இந்தியா நான் பிறந்த பூமி. எனது வீடு லண்டன். தற்போதுள்ள மேயர், மக்களிடம் நம்பிக்கையை இழந்து விட்டார். மக்கள் நல்வாழ்விற்காக சுதந்திரமான தடையற்ற கொள்கைகளை மக்களின் ஆலோசனையுடன் செயல்படுத்தவே நான் எந்த கட்சியையும் சாராமல் சுயேச்சையாக நிற்கிறேன். அனைவருக்குமான பாதுகாப்பான நகரமாக லண்டனை மாற்றுவேன்" என கூறினார் தருண்.

தருண், "நம்பிக்கை மற்றும் வளர்ச்சி" எனும் தேர்தல் முழக்கத்தை முன்னெடுத்துள்ளார். "தற்போது லண்டனின் நிலை என்னை வருத்தமடைய செய்கிறது. இந்த பெருநகரத்தில் வசிப்பவர்களின் வாழ்வு, செயலற்ற ஒரு அமைப்பால் பலியாவது என்னை கவலை கொள்ள செய்கிறது. வரப்போகும் நாட்களில் இரவும் பகலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும். ஆனால் அந்த சவால்களை எதிர் கொண்டு, உலகில் லண்டனுக்கு என முன்னர் இருந்து வந்து தற்போது இழக்கப்பட்டுள்ள முதல் இடத்தையும், தனிப்பட்ட மரியாதையையும் மீட்டு எடுப்பேன்" என கூறினார் ஷ்யாம்.

ஷ்யாம், "நம்பிக்கைக்கான தூதர்" எனும் தேர்தல் முழக்கத்தை முன்னெடுத்துள்ளார். 2024 மார்ச் மாதம், இருவரும் தங்களை ஆதரிப்பவர்களின் கையெழுத்துடனும், டெபாசிட் தொகையுடனும் அதிகாரபூர்வமாக தேர்தலில் போட்டியிட விண்ணப்பங்களை தாக்கல் செய்ய வேண்டும். ஏப்ரல் மாதம் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். சாதிக் கான், தருண் மற்றும் ஷ்யாம் ஆகியோரை தவிர, 8 பேர் இந்த மேயர் தேர்தல் களத்தில் உள்ளனர்.

1947ல் சுதந்திரம் பெறும் வரை இந்தியா, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அடிமையாக ஆளப்பட்டு வந்தது. இன்று அந்நாட்டின் தலைநகரை ஆள இந்திய வம்சாவளியினர் தீவிரம் காட்டுவதை சமூக வலைதளங்களில் பயனர்கள் சுவாரஸ்யமாக விவாதிக்கின்றனர்.

# "எந்த நாட்டின் கொல்லைபுறத்திலும் நாங்கள் இல்லை"

## முய்சு மறைமுக தாக்குதல்

**மாலத்தீவு : ஜன. 15,**

**சில மாதங்களுக்கு முன்பு மாலத்தீவில் நடந்த அதிபர் தேர்தலில், சீன ஆதரவாளராக கருதப்படும் முகமது முய்சு வெற்றி பெற்றார். அவர் அதிபராக பதவி ஏற்றதுமே மாலத்தீவில் இருந்து இந்திய படைகள் உடனே வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டார்.**



இந்நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி சில தினங்களுக்கு முன், இந்தியாவின் யூனியன் பிரதேசமான லட்சத்தீவுக்கு சென்று அங்கு இந்தியர்களை சுற்றுலாவிற்கு ஈர்க்கும் முயற்சியாக பல இயற்கை எழில் மிகுந்த பல காட்சிகளை தனது சமூக வலைதளங்களில் பதிவிட்டு அத்தீவின் சிறப்புகளை வர்ணித்து இருந்தார்.

ஆனால், பிரதமரின் முயற்சியை மாலத்தீவை சேர்ந்த 3 மந்திரிகள், சர்ச்சை கருத்துகள் வெளியிட்டு விமர்சித்திருந்தனர். இதற்கு பதிலடி தரும் விதமாக இந்தியர்கள் பலர் மாலத்தீவிற்கு சுற்றுலா செல்வதை ரத்து செய்தனர். இதற்கிடையே, 5 நாள் பயணமாக சீனா சென்றிருந்த மாலத்தீவு அதிபர் முகமது முய்சு கூறியதாவது:

இந்திய பெருங்கடல், அதில் அமைந்துள்ள அனைத்து நாடுகளுக்கும் சொந்தமானது. இந்தியப் பெருங்கடலில் 9 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பிரத்யேக பொருளாதார மண்டலமாக மாலத்தீவு உள்ளது. இப்பெருங்கடலில் மாலத்தீவிற்கும் பங்கு உண்டு.

நாங்கள் அளவில் சிறிய நாடாக இருக்கலாம். அதற்காக எந்த ஒரு நாட்டிற்கும் எங்களை கொடுமைப்படுத்தும் உரிமை கிடையாது. நாங்கள் எந்த நாட்டின் கொல்லைப்புறத்திலும் இல்லை. நாங்கள் ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடு. சீனா மாலத்தீவின் உள்நாட்டு விவகாரங்கள் எதிலும் தனது செல்வாக்கை செலுத்தாது என்று முய்சு தெரிவித்தார்.

# இட நெருக்கடியை சமாளிக்க குடியேற்றத்தை குறைக்கும் கனடா



**ஒட்டாவா : ஜன. 15,**

**கனடாவின் அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் வீட்டு நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைச்சர் மார்க் மில்லர், அடுத்த மாதங்களில் கனடாவில் வசிக்கக்கூடிய வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய்வதாக அறிவித்தார். ஆனால் நிர்வாகம் எவ்வளவு குறைக்க திட்டமிட்டுள்ளது என்பதை அமைச்சர் தெரிவிக்கவில்லை.**

இந்த ஆண்டு 4,85,000 புதிதாக குடியேறியவர்களும், 2025 மற்றும் 2026 ஆகிய இரண்டிலும் 5,00,000 பேர் புதிதாக வருபவர்கள் உள்ளடங்கும். அந்த நாட்டின் இலக்குகளுக்காக மத்திய அரசு விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இதற்கு முன்பு அரசாங்க ஊழியர்கள் இந்தக் கொள்கைகளால் வீடு வாங்கும் விலையில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர். மேலும், சர்வதேச மாணவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் போன்ற தற்காலிக குடியிருப்பாளர்களால் வீட்டுப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் பாதியில் மட்டுமே 3 லட்சத்துக்கும் அதிகமான தற்காலிக குடியிருப்பாளர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர். எனவே சர்வதேச மாணவர் வரம்பு பற்றிய அரசாங்கத்தின் திட்டம் வீட்டுப் பிரச்சனையை எளிதாக்க முயற்சிக்கிறது.

### பூமியை நோக்கி வருகிறது

# அமெரிக்க தனியார் நிறுவனத்தால் நிலவுக்கு அனுப்பப்பட்ட விண்கலம்



**அமெரிக்கா : ஜன. 15,**

**அமெரிக்காவைச் சேர்ந்த ஆஸ்ட்ரோபோடிக் என்ற தனியார் நிறுவனம் நிலவு குறித்து ஆய்வு செய்யக் கடந்த 8-ந் தேதி வல்கன் ராக்கெட் மூலம் செயற்கைக்கோளை அனுப்பியது. ராக்கெட்டில் இருந்து பிரிந்த சிறிது நேரத்திலேயே, செயற்கைக்கோளில் சிறு வெடிப்பு ஏற்பட்டது.**

அதில் கணிசமான பாகங்களை இழந்தது. இதனால் பெரெக்ரைன் லேண்டர் நிலவில் முறையாகத் தரையிறங்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. ஆனாலும் நிலவை நோக்கிச் செல்லும் போதே, அது வழக்கமான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டது. இந்த நிலையில் ஆஸ்ட்ரோபோடிக் நிறுவனம் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும்போது, விண்கலம் தற்போது பூமியை நோக்கி வருகிறது. ஆனால், விண்கலத்தால் பூமியில் தரையிறங்க முடியாது. அதற்கு முன்பாக அது வளிமண்டலத்தில் எரிந்துவிடும். தற்போது எங்களுக்கு இருக்கும் மற்ற நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளது.

# மாலத்தீவு மேயர் தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வி : இந்தியா ஆதரவு கட்சி வெற்றி

**மாலே : ஜன. 15,**

**மாலத்தீவு மேயர் தேர்தலில் இந்தியா ஆதரவு நிலைப்பாடு கொண்ட எதிர்க்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.**

இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள குட்டி நாடு மாலத்தீவு. கடந்த சில மாதங்களுக்கு அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதையடுத்து அதிபராக சீன ஆதரவுநிலைப்பாடு கொண்ட முகமது முய்சு பதவியேற்றார். அதன்பிறகு சீனாவுடன் அந்த நாடு நெருக்கம் காட்ட தொடங்கியது. இதற்கிடையே, அண்மையில் மாலத்தீவு மந்திரிகள் சிலர் இந்திய பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியது கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

கடும் எதிர்ப்பு கிளம்பியதால் மோடி குறித்து பேசிய மூன்று மந்திரிகளையும் மாலத்தீவு அரசு சஸ்பெண்ட் செய்தது. இந்த சலசலப்புகளுக்கு மத்தியில் மாலத்தீவு தலைநகர் மாலே-வில் மேயர் தேர்தல் நடைபெற்றது. இதில், ஆளும் கட்சி படுதோல்வி அடைந்தது. இந்தியா ஆதரவு நிலைப்பாடு கொண்ட எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் ஆடம் அசிம் வெற்றி பெற்றுள்ளார்.

# தாய்–மகளுக்கு விமானத்தில் காத்திருந்த இன்ப அதிர்ச்சி

**செஷல்ஸ் தீவு : ஜன. 15,**

**கிழக்கு ஆப்ரிக்காவில் உள்ள செஷல்ஸ் தீவில் இருந்து சுவிட்சர்லாந்து செல்வதற்காக ஹிம்மி ஷேத்தல் என்ற பெண்ணும் அவரது மகளும் விமானத்தில் ஏறி உள்ளனர்.**

அந்த விமானத்தில் அவர்களை தவிர முதல் வகுப்பில் 4 பயணிகள் மட்டுமே இருந்துள்ளனர். தாயும் மகளும் பயணித்த எகானமி வகுப்பில் வேறு பயணிகள் யாரும் இல்லை. இதனால் தாயும் மகளும் மட்டுமே விமான ஊழியர்களுடன் ஜாலியாக பாட்டுபாடி, நடனமாடி உள்ளனர். மேலும் அதனை வீடியோ எடுத்து தங்களது வலைதள பக்கத்தில்



பதிவிட்டனர்.

மேலும் பணிப்பெண்கள் விமானத்தில் அனுமதிக்கப்பட்ட பல இடங்களுக்கும் தங்களை அழைத்து சென்றதாக ஹிம்மி ஷேத்தல் கூறி உள்ளார். இந்த பயணம் தங்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்ததாக குறிப்பிட்டிருந்தார். அவரது வீடியோ வைரலான நிலையில் பயனர்கள் பலரும் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# மும்மொழிக் கொள்கை தமிழ்நாட்டில் உருவாக வாய்ப்பு இல்லை : தமிழ்நாடு





# புதுக்கோட்டை ; தண்ணீர் தொட்டியில் சடலமாக மீட்கப்பட்ட குழந்தை: தாய், தந்தை கைது

# சர்வதேச அளவில் இந்திய கரன்சிக்கு நன்மதிப்பு இந்தியாவின் ரூபாய் 35 நாடுகளில் செல்லுபடியாகும்



சென்னை / புதுக்கோட்டை | 15.01.2024 | varalaruu.com | பக்கம்:8 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**டி. எம். நாயர்** , இந்திய அரசியல்வாதி (பி.1868) (இ.1919)



**வி. எஸ். ரமாதேவி** , கருநாடகத்தின் 13வது ஆளுநர் (பி.1934) (இ.2013)



**மாயாவதி குமாரி** , உத்தரப் பிரதேசத்தின் 23வது முதல்வர் (பி.1956)



## இன்றைய நினைவு நாள்

**சு. நடேசபிள்ளை** , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, தமிழறிஞர் (பி.1895) (இ.1965)



**தஞ்சை இராமையாதாஸ்** , தமிழகக் கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் (பி.1914) (இ.1965)



**குல்சாரிலால் நந்தா** , 2-வது இந்தியப் பிரதமர் (பி.1898) (இ.1998)



## தைப்பொங்கல்

## இந்திய இராணுவ நாள்